காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

16–4–72

★

உள்ளே......

காத்திருந்து கண்டறிவோம்!
(தலையங்கம்)

எல்லோரும் இந்நாட்டு மன்னர் (4)
(டாக்டர் அறிஞர் அண்ணா)

பிரிவினை வாதம் என்பது பொருளற்ற பிரசாரமே
(காஞ்சி மாநாட்டில் கலைஞர்)

மாண்புமிகு சிசுவின் அரிய கண்டுபிடிப்பு!
(சிறப்புக் கட்டுரை)

விலை 25 காசு

புத்தாண்டே வருக!

— பாவலர். எழிற்கோவன் —

பூக்கட்டும் புத்தாண்டு மலருனது புதுமை
புகுத்தட்டும் பகுத்தறிவுப் புரட்சியினை யெதிலும்
நீக்கட்டும் பலமடமை! நிலைக்கட்டும் வாய்மை!
நிறைக்கட்டும் பாரெல்லாம் பைந்தமிழன் நேர்மை!
தேக்கட்டும் பாலமுதத் தேந்தமிழின் கடலை
தெறிக்கட்டும் பலநூலாய்த் தெளிரட்டுங் கடமை!
ஆக்கட்டும் புத்துணர்வுக் குமுகாயம்; ஆக்கி
ஆளட்டுந் தாயாகி அறியட்டும் மாட்சி!

கொட்டட்டும் பாவேந்தர் கொள்கைத்தேன் மழையே!
கொணரட்டுந் திக்கெட்டுங் கொஞ்சுதமிழ்ப் புகழ்வே!
கட்டட்டும் புத்தறிவுக் கலைக்கூடம்; கட்டி
காக்கட்டுந் தமிழ்நாட்டைக் கண்போன்றே போற்றி!
வெட்டட்டும் சூழ்ச்சியரை விரட்டட்டும் வீரம்!
வெட்கட்டும் புல்லரெலாம் வேகட்டுந் தீயில்!
எட்டட்டுந் தமிழ்மறைநூல் புகழ்வானை; எட்டி
இனிக்கட்டுங் கரும்பாகி இருக்கட்டும் நன்கே!

மலர்த்தட்டும் அண்ணாவின் எண்ணங்கள்; என்றும்
மணக்கட்டும் பெரியோரின் மணியான கொள்கை!
புலர்த்தட்டும் பைந்தமிழர் பொற்காலம்! புவியும்
புகழட்டும் புத்தாண்டுன் புரட்சிநல விளைவை!
உலர்த்தட்டும் பிறநாட்டார் சுரண்டலினை; ஊக்கம்
உயர்த்தட்டும்; நாட்டுரிமை உணர்த்தட்டும் நன்கே!
அலர்த்தட்டும் பேராண்மை; அகலட்டுங் கொடுமை!
அறமூட்டும் புத்தாண்டு அணியேநீ வருக!

'பிரிவினை வாதம்' என்பது பொருளற்ற பிரசாரமே!

காஞ்சிபுரம் மாநாட்டில் கலைஞர் திட்டவட்ட அறிவிப்பு!

"இங்கே தொடங்கப்பட்டிருக்கின்ற மாநில சுயாட்சிக் கோரிக்கை, தமிழ் நாட்டுக்கு மட்டும் கேட்கப்படுவதல்ல—அப்படிக் கேட்டிருந்தால், தமிழ் நாட்டிற்கு சுயாட்சி என்றுதான் கேட்டிருப்போம்! அப்படிக் கேட்டிருந்தால், 'தமிழ் நாட்டிற்குச் சுதந்தரம்' என்றுதான் கேட்டிருப்போம்!

"நாம் சுயாட்சி கேட்பது மாநிலங்களுக்கு -இந்தியாவிலிருக்கின்ற எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்துத்தான் கேட்கிறோம்!

"'எல்லோரும் கேட்கவில்லையே- நீங்கள் மட்டும் கேட்கிறீர்களே' என்றால், 'எல்லோரும் கேட்கக் கூடிய காலம் ஒரு நாள் நிச்சயமாக வந்தே தீரும்' என்போம்!

"அந்த நாளுக்கு நீங்கள் அத்தனைப் பேரும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கத்தான் இதுபோன்ற மாநாடுகளில் தொடர்ந்து பல கருத்துக்களைப் பேசி வருகிறோம்; அந்தக் கருத்துக்களையெல்லாம் உள்ளத்தில் ஏந்திச் செல்கின்ற கழகக் கண்மணிகள், 'கூடினோம்—கலைந்தோம்' என்றில்லாமல், இங்கே தரப்பட்ட கருத்துக்களையெல்லாம் நாடு முழுவதிலும் பரப்பிடல் வேண்டும்! 'தி.மு. கழகத்தை யாராலும் வீழ்த்திட முடியாது' என்கின்ற நெஞ்சுறுதியுடன் இதனை நிறைவேற்றுமாக!"

—என்று கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. 5-வது மாநாட்டில் ஆற்றிய உரையின் இறுதியில் குறிப்பிட்டார்; அவர் ஆற்றிய உரை வருமாறு:-

"மாநில சுயாட்சிக் கோரிக்கை பிரிவினைக்கு வித்திடும் — என்று சிலர் கூறிக் கொண்டிருக்கிறார்கள்: நாம் அதை மறுத்து வருகிறோம்.

இங்கு ஆலடி அருணா பேசுகையில், 'மாநில சுயாட்சிக் கோரிக்கை பிரிவினைக்கு வித்திடுவதல்ல' என்று கூறிவிட்டு மேலும் ஒன்றைச் சொன்னார்—'பிரிவினை வேண்டுமா—வேண்டாமா' என்று ஒரு தேர்தல் நடக்குமானால், தமிழ் நாட்டில் அதிக வாக்குகள் 'பிரிவினை வேண்டும்' என்பதற்குத்தான் விழும்' என்று கூறினார்.

நண்பர் அருணாவுக்குச் சொல்லிக்கொள்கிறேன் — 'அப்படி ஒரு தேர்தல் நடந்தால், 'பிரிவினை வேண்டாம்' என்பதற்கு விழுகின்ற முதல் ஓட்டு என்னுடைய ஓட்டுத்தான்' என்று!

நாம் மாநில சுயாட்சி கேட்பதால், நம்மை, 'பிரிவினை வாதிகள்' என்று கூறி ஒரு காரணத்தைச் சொல்லி வருகிறார்கள்; 'நீங்கள் திராவிட நாடு கேட்டவர்கள்; ஆகவே, நீங்கள் கேட்கும் மாநில சுயாட்சி கூடப் பிரிவினைதான்' என்று கூறுகிறார்கள்.

'திராவிட நாடு திராவிடருக்கே' என்று முழங்கிய நாம், அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் கூடி, இந்திய நாட்டுப் பாதுகாப்புக்கு ஆபத்து வந்தபோது—'திராவிட நாடு கொள்கையைக் கைவிட்டு விட்டோம்' என்று பேரறிஞர் அண்ணா அவர்களே அறிவித்துவிட்டார்கள்.

நாட்டு மக்களின் நலிவு தீர — சமதர்மத் திட்டங்கள் நிறைவேற —சோஷலிசச் சமுதாயம் உருவாக —மாநில சுயாட்சிக் கொள்கை தேவையென உணர்ந்து அதை ஏற்றோம்! அதில் பிரிவினை வாடை இல்லவே இல்லை!

ஆனாலும் சிலர், 'முன்பு நீங்கள் திராவிட நாடு கேட்டவர்கள்' என்ற பழையவாதத்தைக் கிளப்பி விடுகிறார்கள்: அதை நாம் ஏற்றுக் கொள்வதற்கில்லை; பலமுறை அது பற்றித் தெளிவாக்கி விட்டோம்.

தமிழ் நாட்டிலுள்ள காங்கிரசார் அனைவரும் வீரேந்திரபட்டீலுக்கு ஓட்டுக் கேட்பதற்காகப் பெங்களூருக்குச் சென்றார்கள்.

கக்கன் அவர்கள் மைசூர் மாநிலத்திற்குச் சென்று வீரேந்திர பட்டீலை ஆதரித்துப் பேசியிருக்கிறார்; அந்த வீரேந்திர பட்டீலின் கட்சி—மைசூர் ஸ்தாபனகாங்கிரசு வெளியிட்ட தேர்தல்அறிக்கையில்,

"We will fight in a determined manner for greater autonomy for the State and against all discrimination, stepmotherly treatment by the Centre"

—என்று கூறப்பட்டிருக்கிறது.

வீரேந்திர பட்டீலின் மாநில சுயாட்சிக் கோரிக்கையை ஆதரித்தவர்கள் நம்மைப் பார்த்து, 'மாநில சுயாட்சி கேட்பது பிரிவினை வாதம்' என்கிறார்கள்! இதைச் சுட்டிக் காட்டினால், 'வீரேந்திர பட்டீலின் வரலாறு வேறு—உங்களுடைய வரலாறு வேறு' என்று கூறுகிறார்கள்.

ஆனால், அதே வீரேந்திர பட்டீல் மைசூரின் முதலமைச்சராகஇருந்தபோது டில்லிக்குச் சென்று நிருபர்களிடையே பேசுகையில், 'மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தராவிட்டால் டில்லியில் உள்ள 'மைசூர் பவனு'ம் தமிழ் நாடு விருந்தினர் விடுதியும் தூதுவரகங்களாக மாறும்' என்று கூறினார்.

'மாநிலங்கள் தனித் தனியாக பிரிந்து போய்விடும்' என்னும் பொருள்பட அவர் அப்படிக் கூறினார்; அந்த வீரேந்திர பட்டீலை கக்கன் ஆதரித்துபேசுகிறார்-காமராசர் ஆதரித்து அறிக்கை விடுகிறார்

ஆனால் நாம் கேட்டால், 'உங்களை ஒழித்துக் கட்டிவிடுவோம்' என்கிறார்கள்; மாநில சுயாட்சியை, 'பிரிவினை வாதம்' என்கிறார்கள்.

மாநில சுயாட்சி பற்றி மாற்று முகாமிலிருந்து எழுப்பப்படும் ஒரு சந்தேகம், 'மாநில சுயாட்சி தேவை என்கிறீர்களே — என்னென்ன அதிகாரங்கள் தேவை என்று வரையறுத்துக் கூறினீர்களா' என்பதாகும்.

இப்போதைக்கு என்னென்ன அதிகாரங்கள் தேவை என்று கூறுவதைவிட 'எது எது தேவையில்லை' என்று கூறுவது எளிதானது.

இராணுவ நிர்வாகம் எங்களுக்கு (மாநிலங்களுக்கு)த் தேவை இல்லை. பாதுகாப்பு பற்றிய அதிகாரங்கள் தேவை இல்லை; வெளிநாட்டுறவுபற்றியஅதிகாரங்கள் தேவை இல்லை; மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்து — செய்தி மாநிலங்களுக்குத் தேவை இல்லை; ரூபாய் நோட்டு அச்சடிப்பது எங்களுக்குத் தேவை இல்லை.

இவைகள் அனைத்தும் விவாதத்திற்கு உரியவைகள் அல்ல!

இவை போக, மிச்சமிருக்கும் அதிகாரங்கள் விவாதத்துக்குரிய பிரச்சினைகளாகும் எவை எவை. மாநிலங்களுக்கு — எவை எவை மத்திய அரசுக்கு - என்பதை விவாதித்து முடிவு கண்டாக வேண்டும்; இதுதான் கழகத்தின்கோரிக்கை. *

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 13 ஆறுமாத சந்தா ரூ. 6-50

மலர் 8 | 16—4—72 | இதழ் 40

காத்திருந்து கண்டறிவோம்!

சென்ற கிழமை இறுதியில், காஞ்சிபுரத்தில் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட 5-ஆவது மாநாட்டின் இறுதி உரையாற்றிய கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள், மாநில சுயாட்சி தொடர்பான தனது திட்டவட்டமான விளக்கத்தைக் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கதும், பாராட்டத்தக்கதுமாகும்.

துணைக்கண்டத்தின் பல மாநிலங்களில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தக் கோரிக்கைக்கு வரவேற்புக் கிடைத்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், துரதிருஷ்ட வசமாக தமிழ் நாட்டுக்குள்ளேயே—முன்பு எவரெல்லாம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று மேடை அதிரப் பேசியும், ஏடு நிரம்ப எழுதியும் வந்திருக்கிறார்களோ, அவர்களே இன்று எதிர்ப்புக் காட்ட முன்வந்திருக்கிறார்கள்.

மாமியார் உடைப்பதனாலேயே மண்சட்டி பொன்சட்டியாகி விடுவதில்லை என்பதும், மருமகள் உடைப்பதனால் மட்டும் பொன்சட்டி மண்சட்டியாகி விடுவதில்லை என்பது தெரிந்திருந்தும், சில பேர் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சுயாட்சிக் கோரிக்கையை, முன்பு தி. மு. க. திராவிட நாடு கேட்டது என்ற காரணத்தைக் காட்டி சுயாட்சி கோரிக்கையை பிரிவினை வாதம் என்று விமர்சிப்பதுடன், தற்கொலைக் கொப்பான நிகழ்ச்சி என்றும் எடுத்துக்காட்டி மக்களின் வள வாழ்வுக்கு மாறான தடம் அமைத்திட முயன்று கொண்டிருக்கிறார்கள்.

தி. மு. கழகம் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டது என்று ஆயிரக்கணக்கான மேடைகளில் சொல்லி தெளிவுபடுத்திவிட்ட பிறகும், மாநாடுகள் வாயிலாக எடுத்துக் காட்டி இருப்பதற்குப் பிறகும், சட்டமன்றத்திலேயே பேரறிஞர் அண்ணா அவர்களாலும் அவரை அடுத்து டாக்டர் கலைஞர் அவர்களாலும், மற்ற மாண்புமிகு அமைச்சர்களாலும் எடுத்துக் காட்டி விடப்பட்டிருப்பதற்குப் பிறகும், தி. மு. க. - வின் சுயாட்சிக் கோரிக்கைக்குக் களங்கம் கற்பிக்க நினைப்பவர்கள், தமிழ் நாட்டின் எதிர்காலத்துக்கே உலை வைக்க நினைக்கிறார்கள் என்றுதான் கருதவேண்டி இருக்கிறது.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாநாட்டின் போது—

பிரிவினை வேண்டுமா? வேண்டாமா என்று ஒரு தேர்தல் நடக்குமானால், தமிழ் நாட்டில் அதிக வாக்குகள் பிரிவினை வேண்டும் என்பதற்குத்தான் விழும் என்று நண்பர் அருணா குறிப்பிட்டார்.

அவருக்குச் சொல்லிக்கொள்கிறேன். அப்படி ஒரு தேர்தல் நடந்தால்—

பிரிவினை வேண்டாம் என்பதற்கு விழுகிற முதல் ஓட்டு என்னுடைய ஓட்டுத்தான்.

—என்று கழகத் தலைவர் திட்டவட்டமாக பிரிவினைக்கு எதிரான தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே, பிரிவினை வாதத்தினை, மாநில சுயாட்சிக் கோரிக்கையுடன் இணைத்துப் பேசி, தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்வதுடன், தமிழ் நாட்டையும் ஏமாற்ற முயற்சிக்கும் பரிதாபத்திற்கு நமது இரங்கலினைப் படைத்துக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

அதே நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினை கோரவில்லை என்று தெளிவுபடுத்திவிட்டு, சுயாட்சி குறித்த விளக்கமும் கொடுத்திருக்கிறார்.

மத்திய அரசிடமிருந்து, தங்களுக்கு எந்தெந்த அதிகாரங்கள் எல்லாம் தேவையில்லை என்று அடுக்கிக் காட்டி இருக்கிறார்.

இராணுவ நிர்வாகம் எங்களுக்குத் தேவையில்லை;

பாதுகாப்புப் பற்றிய அதிகாரங்கள் தேவையில்லை;

வெளிநாட்டுறவு பற்றிய அதிகாரங்கள் தேவையில்லை;

மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்து — செய்தி தொடர்பான அதிகாரங்கள் தேவையில்லை.

—என்று திட்டவட்டமாக எடுத்துக் காட்டி இருப்பதுடன், மற்ற அதிகாரங்கள் குறித்து பரஸ்பரம் பேசி உடன்பாட்டுக்கு வந்து தீரவேண்டும் என்பதையும் விளக்கி இருக்கிறார்.

கழகத்தின் சுயாட்சிக் கோரிக்கைக்குக் கிடைக்கும் ஆதரவு மூலம், பிரிவினைச் சக்தி, வலுப் பெற்றுவிடும் என்று எவரேனும் கருதுவார்களானால், அந்தப் பிரிவினைச் சக்தியை வேருடன் கெல்லி எறிய மேலே குறிப்பிட்டிருக்கும் அதிகாரங்களில் சிலவே போதுமானதாகும். அவை அனைத்தும் மத்திய அரசிடமே இருக்கட்டும் என்று தெளிவாக விளக்குவதன் மூலம், கழகத்தின் தூய இதயத்தை வெளிப்படுத்தி இருக்கிறார் என்றே மகிழ்ச்சியடைய வேண்டும்.

எனவே, தெளிவடையவே கூடாது என்று இருளுக்குள் புதைந்து கிடப்பவர்கள் தவிர, சந்தேகத்தில் ஊசலாடிக் கொண்டிருப்போருக்கு கலைஞரது இந்த விளக்கம் போதுமானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த விளக்கத்திற்குப் பின்னரும், யார் யார் தெளிவடைந்திருக்கிறார்கள்? யார் யார் புதையுண்டு போயிருக்கிறார்கள் என்பதைக் காத்திருந்துதான் கண்டறிய வேண்டும்.

—திருவாரூர் முத்துராமன்.

பக்தவத்சலனார்க்குப் பகிரங்க மடல்!!

மீஞ்சூர் மேதை அவர்கட்குப் பொடியன் எழுதும் மடல்; வணக்கம் என்று சொல்லி என் மடலை வளர்க்க விரும்பவில்லை அவ்வளவு திமிரா என்று கேட்டு விடாதீர்கள்; நமஸ்காரம் என்றால் தானே உமக்கு நாவற்கனியாய் இருக்கும். அப்படிச் சொல்ல விரும்பாததால்தான் அடியேன் உங்களுக்கு வணக்கம் கூறவில்லை.

ஐயனே! 28—3—72 நாளிதழ் ஒன்றில் தாங்கள் நிருபர்களுக்களித்த பேட்டி ஒன்றினைப் பெரிய எழுத்துக்களில் பார்த்தேன்; இந்த வயதிற்குள் நான் எத்தனை பாவங்களைச் செய்திருப்பேனோ? இல்லாவிட்டால் அதைப் பார்த்திருப்பேனா? "சுதந்திரத் தியாகிகளும் இந்தி எதிர்ப்பு வீரர்களும் ஒன்றா?" என்று தலைப்பில் வெளியிட்ட செய்தியைத் தாங்கள் கேட்ட கேள்வி என்று அந்த ஏடு குறிப்பிட்டிருந்தது. இந்தக் கேள்விக்குரிய விடைகளை நான் சொல்லுவதற்கு முன்னால், இந்தக் கேள்வியில் தாங்கள் சிக்கவைக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தாங்கள் அளித்த பேட்டியில், எந்த இடத்திலும் 'இந்தி எதிர்ப்பு வீரர்கள்' என்று குறிப்பிடாதபோது, அந்த ஏடு மேற்கோள் குறிகளோடு இந்தி எதிர்ப்பு வீரர்கள் என்று குறிப்பிட்டுள்ளதே ஏன்? ஒருவேளை அந்தப் பத்திரிகை இந்தியை எதிர்ப்பவர்களை, எதிர்த்தவர்களை வீரர்கள் என்று கருதுகிறதா? ஆமாம் என்றால், தங்களைத் தமிழ் மக்களின்முன் காட்டிக் கொடுக்கும் தன்மையோடு தானே இப்படிக் குறிப்பிட்டிருக்க வேண்டும்!!

அந்த ஏடு காட்டிக் கொடுத்துதானா தமிழகம் தங்களைக் கண்டுகொள்ள வேண்டும்!! விபீடணனையும், சுக்கிரீவனையும் காட்டிக்கொடுக்க முடியும் என்றால் இந்த உலகம் சிரிக்காதா? உங்களையாவது காட்டிக் கொடுப்பதாவது? நல்ல நகைச்சுவை!!

இந்தியை எதிர்ப்பவர்கள் என்றாலே உங்களுக்குப் பிடிக்காதே; உங்களை எதிர்ப்பவர்களை உங்களுக்குப் பிடிக்குமா என்ன? இந்தி வேறு, நீங்கள் வேறா? இல்லையே!! இந்தியா நான் என்று கேட்டு விடாதீர்கள்! 'நான்தான் அவன்; அவன்தான் நான்' என்றால் அவ்வளவு நெருக்கமான உறவு என்று பொருள் என்பது உங்களுக்குப் புரியும் என்றுதான் அப்படிச் சொல்லிவிட்டேன்.

அப்படியும் கோபித்துக்கொள்வீர்கள் என்றால் அதைத் திரும்பிப் பெற்றுக் கொள்ளுகிறேன்; உங்களுக்குத் தெய்வமே இந்திதான் என்று திருத்திக் கொள்ளுகிறேன். இதைத் தாங்கள் மறுக்கமாட்டீர்கள். அப்பப்பா! அந்த தெய்வத்திற்கு ஆயிரமாயிரம் தமிழ் அரிமாக்களின் இரத்தத்தால் அல்லவா அபிஷேகம் செய்தீர்கள்; அவர்களின் உயிர்ப்பூக்களை அல்லவா அதன் காலடியில் குவித்தீர்கள்!! நீங்கள் மட்டும் முதலமைச்சராக இல்லையானால், குடும்பக் கட்டுப்பாடு திட்டமே தோல்வி யடைந்திருக்குமே. 'ஆயிரமாயிரமாக இளைஞர்களைக் கொல்லாமல் நீங்கள் இருந்திருந்தால், அவர்களுக்கெல்லாம் திருமணமாகி இருந்தால் எத்தனைப் பிள்ளைகள் பிறந்திருக்கும்!! இந்த நாட்டின் 'தேசியப் பிரச்சனை'க்குத் தங்கள் திருத்தொண்டு எந்த அளவிற்குப் பயன்பட்டுள்ளது பார்த்தீர்களா!!

சொல்லவேண்டியதைச் சொல்லாமல் எங்கெங்கோ சுற்றுகிறேன் என்று கருதுகிறீர்களா? என்ன செய்வது!! தங்களை நினைத்தாலே என் தலை சுற்றுகிறது!! ஏன்? அவ்வளவு மகிழ்ச்சி என்கிறீர்களா? 'பத்து லட்சம்' ரூபாய் பாடுபடாமல் வந்தால் எப்படி இருக்கும்; அவ்வளவு மகிழ்ச்சி. தங்களை நினைத்தாலே போதும், அந்த பத்து லட்சந்தான் எனக்கு நினைவுக்கு வருகிறது; உடனே மகிழ்ச்சி, அதனால் எனக்குத் தலை சுற்றுகிறது" போகட்டும்!

"சுதந்திரப் போராட்டத்தின் போது எல்லாக் கட்சியினரும் கலந்து கொண்டனர்" என்று ஒரு புதிய உண்மையினைக் கண்டுபிடித்துக் கூறியுள்ளீர்கள். அருமையான ஆராய்ச்சி இது; உங்கள் அரசியல் திறமையைத்தான் இந்த உலகமே அறிந்துள்ளது; ஆனால் நீங்கள் ஒரு ஆராய்ச்சிமலை என்பதையும் இந்த உலகம் இனிமேல் ஒப்புக்கொள்ள வேண்டும். "நாங்கள் மட்டுமே சுதந்திரத்திற்காகப் பாடுபட்டோம்; சுதந்திரத்தை நாங்களே பெற்றுத்தந்தோம்; சுதந்திரத்தை வாங்கித் தந்தவர்கள் தானே இந்த நாட்டை ஆள வேண்டும்" என்றெல்லாம் நீங்கள் சொல்ல, "நாங்களும் பாடுபட்டே நாட்டிற்குச் சுதந்திரம் வந்தது" என்று எதிர்க்கட்சிகள் சொல்லிட வந்தார்கள். இனிமேல் எதிர்க்கட்சியினர் சொல்ல முடியுமா? நீங்கள்தான் அவர்கள் சொன்னதைத் திருப்பிச் சொல்லிவிட்டீர்களே; உங்கள் ஆற்றலே ஆற்றல்தான்!!

இதை மட்டும் சொல்லிவிட்டு நின்றிருப்பீர்களேயானால் இந்த மடலையே எழுதவேண்டியிருக்காதே!!

"இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிப்பிட்டக் கட்சியைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு ஈடாக முடியுமா?" என்று கேட்டுள்ளீர்கள். உம்......என்ன செய்வது? கல்லில் நெல்—விளைக்க முனைவதும், உங்களுக்கு உண்மையை உணர்த்துவதும் ஒன்றுதான்!! அதற்காக, சில உண்மைகளை எடுத்துக் காட்டாமல் இருக்கவும் முடியவில்லை.

எல்லா மொழியினரும், எல்லா இனத்தவரும், எல்லா நெறியினரும் அந்நியர் ஆட்சியை அகற்றுவதில் ஒன்றாக இருக்கவேண்டிய நெருக்கடி, எதிரிக்கு இடங்கொடுக்கக்கூடாதே என்ற எண்ணம்; சுதந்திரம் எல்லார்க்குமே தேவை என்னும் உண்மை; ஆகிய இவைகளால் நாடே ஒன்றுபட்டது; நாடே போராடியது; நாடே தியாகம் செய்தது. எனவே எல்லாராலும் தியாகிகளாக முடிந்தது; அங்கு கட்சி வேறுபாட்டைக் காண முடியாது.

ஆனால், இந்தி எதிர்ப்பு அத்தகையதல்லவே,—ஒரு மொழி, மற்றொரு மொழிமீது குதிரையேற நினைக்கும்போது அந்த மொழியினர்தான் கொதித்தெழ முடியும்."

(15-ஆம் பக்கம் பார்க்க)

— பொடியன் —

காஞ்சீபுரம்

தம்பி !

எல்லோரும் இந்நாட்டு மன்னர் (4)

மன்னனைக் காணப் பலர் வரக்கூடும்; இளவரசர்கள், தளபதிகள், வணிகக் கோமான்கள், கலை வல்லோர், மார்க்கத் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், இப்படிப் பலர், இவர்கள் ஒவ்வொருவருக்கும், மன்னனைக் காண்பது, அவருடன் உரையாடுவது என்பதிலே, ஒவ்வொரு முறை இருக்கும். கொலு மண்டபம், கோட்டைவெளி, விழா மன்றம், களியாட்டக் கூடம், கானாற்றுப் பக்கம் எனும் பல்வேறு அரங்கங்களில், மன்னனுடன் செல்வோர், அல்லது வந்து காண்போர், என்ன முறையில் வரவேற்கப் படுவர், எங்கு இடம் பெறுவர், என்பதற்கெல்லாம், கட்டுத் திட்டம் உண்டு; அது துளியும் கெடாதபடிபார்த்துக் கொள்வார்கள்; கெடவிடின், மன்னன், தன் நிலை அறியாது தடுமாறினான் என்று கேலி பேசுவர், கண்டிக்கக்கூடச் செய்வர்.

இங்கு வர இருக்கும் பிரிட்டிஷ் பேரரசிக்கு மணாளனாக இருப்பவர் வேறோர் நாட்டு அரச குடும்பத்தவர் எனினும், அரசர் அல்ல! பேரரசியுடன் அவர் செல்கிறார், பல நாடுகளுக்கு; பேரரசிக்குக் காட்டப்படும் சில தனிச் சிறப்புகள் இவருக்குக் கிடையாது; பெற இயலாது; கேட்கவும் மாட்டார். நாட்டுக்கு மட்டுமல்ல, நாயகனுக்கும், அவர் பேரரசி!

பேரரசியின் பாராளுமன்றத் துவக்க உரை நிகழ்ந்தபோது, பேரரசியின் தங்கை, அவையில், அரச குடும்பத்தினருக்கு என்றுள்ள இருக்கையில் காணப்படவில்லை, காரணம் என்ன என்று இதழ்கள் விளக்கின. ஒரு இதழ்; உண்மையான காரணம், அவர் மட்டும்தான், அரச குடும்பத்தினர் இருக்கையில் அமரலாமே யொழிய, பக்கத்தில் கணவன் அமர முடியாது; ஏனெனில், அவர் அரச குடும்பத்தவர் அல்ல; தனக்கு ஒரு இடம், மணாளனுக்கு மற்றோர் இடம் என்று இருப்பதை விரும்பாததாலேயே அரச குமாரி, பாராளுமன்ற விழாவில் கலந்து கொள்ளவில்லை, என்று எழுதிற்று. இது இந்த ஆண்டு!!

இந்திரா காங்கிரஸ் பேச்சாளராகி இருக்கும் ஈ.வி.கே. சம்பத், அன்றைக்கு எப்படி இருந்தார் என்பதற்கு இவ்வாரக் கட்டுரை ஒரு பதம்.

இத் தொடரின் நான்காவது கட்டுரை இது. 20-11-'60 அன்று 'திராவிட நாடு' இதழில் வந்தது.

இங்கு வர இருக்கிறாரே எலிசபத் பேரரசி, அவர், புலிவேட்டை காணப் போகிறார்; காண மட்டுமே! புலி வேட்டை ஆடப்போவதோ, பேரரசியின் கணவர்.

தம்பி! பேரரசி, புலி வேட்டை ஆடுவது கூடாது; தரக் குறைவான செயல்! அவர் கணவர், வேட்டை

ஆடலாம், அவருக்கு உள்ள நிலையின் அளவு அது! ஏன் இந்த வித்தியாசம் என்று வியப்பாக இருக்கிறதா? இதிலென்ன, தம்பி! வியப்பு? உண்மையாக நீ வியப்புற வேண்டியது எதை அறிந்து தெரியுமா? **பேரரசியின் கணவன் பேரரசன் அல்ல! பேரரசனின் மனைவி பேரரசி ஆகலாம்!!**

இத்தகைய சில தனிச் சிறப்புகள், இன்றும், அரசர்களுக்கு உள்ளன; மக்களும், இந்தச் சிறப்புகளைத் தருவதிலே தயக்கம் காட்டுவதில்லை; மன்னன் உலா, விழாபோல் இருக்கலாம் என்கின்றனர் மக்கள்; விழாவில் களிப்புப் பெறுகின்றனர்! மன்னன், கண்ணைக் கவரும் வனப்பு அளித்திடும் அணி பணி பூண்டிடலாம், மக்கள் அதனை அனுமதிக்கின்றனர்! கண்டு அகமகிழ்கின்றனர்; ஆனால், மன்னன், ஆட்சிப் பொறுப்பு அத்தனையும் வேண்டுமென்றுகேட்டாலோ மறுக்கின்றனர்; உமக்கு எது நல்லது என்பது, எமக்கன்றோ தெரியும் என்று மன்னன் பேசிடின், அதனை மமதை என்கின்றனர் மக்கள்!!

பிடி யாராரிடமோ உளது, முடி மட்டும் நம் தலையில்! அரசன் என்று விருது இருக்கிறது, ஆட்சியோ நம் விருப்பப்படி இல்லை! அரண்மனை இருக்கிறது பெரிதாக, ஆனால் அது சிங்காரச் சிறைக்கூடம் போலாக்கப்படுகிறது! இந்நிலையில், அரசர்க்கான உடையும் முடியும் வெறும் சுமையாகிறது. பொன்னால் சமைக்கப்பட்டு நவமணிகள் இழைக்கப்பட்ட, 'சிம்மாசனம்,' எந்தச் சமயத்திலும் கடித்திடத் தயாராக இருக்கும் 'சர்ப்பாசனம்' போலாகிறது! இந்த நிலையில், மன்னன் என்று இருப்பதைவிடக் குடிமகனாக இருப்பது மேல்! மன்னன், குடிமகனை, எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்ற முறை முறிந்து போய்விட்டது. குடிமகன், இன்று மன்னனை, எப்படி எப்படிக் காணவேண்டும் என்று எண்ணுகிறானோ, அதுபோல் ஆக்கிவிட முடிகிறது. இந்நிலையில், குடிமகனாக இருப்பது கோலேந்தியாக இருப்பதைக் காட்டிலும், எத்தனையோ மடங்கு மேலானது, என்று எண்ணிக் கிடந்திடும், மன்னர்களும் உளர்.

இவ்விதமான எண்ணம் கொண்ட மன்னனைத்தான் தம்பி! நாம் காணப் புறப்பட்டோம்.

அதோ பார்! ஏறு நடை! எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசக்கூடியவர் என்பதை எடுத்துக் காட்டிடும் பார்வை. கண்டவர், தன் நிலை உயர்ந்தது என்பதை அறியவேண்டும் என்றநோக்குடன், உடை அலங்காரம், ஆதிக்கக்காரருக்கு அடிபணிபவன் நான் அல்ல; நான் புரட்சி நோக்குடையவன் என்பதை எடுத்துக் காட்டும், சிகப்பு அங்கி, இவர் ஓர் அமைச்சர்! புதிதாக அமைச்சரானவர்!

அமைச்சரானேன், என்கிறார் இவர்.

அமைச்சர் ஆக்கினேன் என்பார், முதலமைச்சர்.

இவர், வணிகக் கோட்டத் துறைக்குத் தலைமை ஏற்றிருக்கும் அமைச்சர், பேரறிஞர் பெர்னார்ட்ஷா, இந்த அமைச்சருக்கு போனார்ஜிஸ் என்று பெயரிட்டிருக்கிறார்.

தம்பி! நான், நமது வசதிக்காக, இந்த அமைச்சரை, புயலார் என்று அழைக்கிறேன். இந்த அமைச்சர், தமது அறிவாற்றலால், புரட்சிப் போக்கினால், முடிஅரசு முறையையே வீழ்த்தத்தக்க புயல் கிளப்பி விடுவதாக எண்ணுபவர்; எனவே, இவருக்குப் புயலார் எனும் பெயர் ஒருவகையில் பொருத்தமானதுங்கூட.

அமைச்சர் அவையில் இடம் பெறுமுன், இவர், பொறிபறக்கப் பேசியும் புதுப் புது திட்டங்களைத் தீட்டியும், ஆட்சி முறையிலே மதமதப்பு ஏற்பட்டு விட்டது என்று கடிந்துரைத்தும், மன்னராட்சிமுறை உள்ள மட்டும், மக்களாட்சி மலராது என்று விளக்கியும், முடிதரிப்போரே இருத்தல் ஆகாது, முழுக்க முழுக்கக் குடிஅரசு ஏற்பட்டாக வேண்டும் என்று முழக்கமிட்டும், 'பெரிய புள்ளி' ஆனவர்; "புயலார்" ஆனவர்!

அவருக்கு அமைச்சர் அவையில் இடம் தரப்பட்டது.

புதிய அமைச்சர் மன்னனைக் காண வருகிறார்.

மன்னனைக் காணவந்திருக்கிறேன் — என்று புயலார், கூறிடும்போது, அச்சொல் கேட்டதும் அலுவலர்கள் அஞ்சி நடுநடுங்கி, ஐயனே! அமருவீர்! இதோ அரைநொடியில் அரசனை அழைத்து வருகிறோம்!—என்று கூறிவிட்டு, ஓடோடிச் சென்று, அரசனை அழைத்து வருவர், என்று எண்ணிக்கொண்டிருந்திருக்கக்கூடும். ஏனெனில்.மன்னர்களைப் பேட்டி காணச் செல்வது பேதமை என்றும், மக்களின் தலைவர்களை மன்னர்கள் காத்திருக்கச்செய்வது கொடுமை என்றும், அந்த முறையை வாழ விடுவது மடைமை என்றும், சந்தைத் திடலில், அவர், எத்தனையோ முறை முழக்கமிட்டிருப்பார். அப்படிப்பட்டவர், அமைச்சர் என்ற நிலையைப் பெற்று மன்னனைக் காண்வந்திருக்கிறார் — மதியிலிகள், அவரை, ஊர் என்ன? பேர் என்ன? உற்ற குறை யாது? என்று கேட்கிறார்கள்—அவ்விதம் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டதால்!! புயலார் கோபம் கொள்ளாம விருந்திருக்க முடியுமா.

கேட்பதென்ன, காத்திருப்பதென்ன! வந்தது மன்னனைக் காண—காணச் செல்வோம்'! — என்று எண்ணிக்கொண்டார் போலிருக்கிறது, உள்ளே நுழைந்தார். மன்னனுக்கு அனுப்பப்படும் மடல்களைக் கவனிக்கும் அலுவலர் இருவர் கண்டனர்; அவர்களில் ஒருவன், வந்தவர் யார் எனக் கண்டு கொண்டான். அவர் போக்கும் நோக்கமும் தெரிந்தவன் என்ற முறையில், பேசினான்.

"வருக! அமைச்சரே! வருக! தாங்கள் அமைச்சரானதற்காகத் தங்களை நான் வாழ்த்துகிறேன்...... இல்லை, இல்லை, தங்களைப் பெற்றதற்காக, அமைச்சர் அவையை வாழ்த்துகிறேன்!"

பொல்லாதவன் இந்த இளைஞன், முடிஅரசனோ, குடிஅரசுக் கொள்கையுடையோனோ, எவனாயினும், புகழ்மொழி கேட்டால், மயங்கிப் போவர், என்ற உண்மையை உணர்ந்து, புயலாரிடமே, அந்த வித்தையைக் காட்டுகிறான். மன்னர்களாகிலும், பலருடைய புகழுரையைக் கேட்டுக் கேட்டுச் சலித்துப் போயிருப்பர்! எனவே அவர்கள், தம்மைப் புகழ்பவர்களின் எண்ணிக்கை வளர வளர, ஓரளவு சலிப்புணர்ச்சி கூடக் கொள்ளக்கூடும். புயலார் போன்றவர்கள் அவ்விதம் அல்லவே! அங்காடியிலும் ஆற்றோரத் திடலிலும், முச்சந்தியிலும் மன்றங்களிலும், பாராட்டுரைகளைப் பெற்றிருப்பர். இது அரண்மனை! எந்த அரண்மனையைச் சுட்டிக் காட்டிக் காட்டி ஆணவம் குடிகொண்ட இடம்! அக்ரமம் கொலு

இருக்கும் கூடம்! என்றெல்லாம் கண்டித்துப் பேசி இருக்கிருனே, அதே அரண்மனை, அங்கு அவன் நுழைகிருன், மன்னனைக் காண, அமைச்சர் என்ற நிலை பெற்று! அந்த இடத்தில், தன்னைப் புகழ்கிருர் கள் என்ருல், உச்சி குளிர்ந்திடத்தானே செய்யும்.

மன்னர்! என்று இளைஞர்களில் ஒருவன் அறிவிக் கிருன்.

உட்கார்ந்திருக்கும் புயலார், இருக்கையில் இருந்தபடியே, கதவுப்பக்கம் திரும்பிப் பார்க்கிருர்–எழுந்திருக்கவில்லை.

மன்னன் வருகிருர் என்ற உடன், எழுந்து நின் ருல், செ! தன்மானத்தை, இழந்துவிடும் செயலாகி விடாதா! ஓ! பயல், நம்மைக் கண்டதும் மரியாதை காட்டுகிருன் என்று மன்னன் எண்ணிக்கொண்டுவிடு வானே! நாடு, நமது கட்டளைக்காகக் காத்துக்கிடக் கிறது. நமது அறிவாற்றல் இந்த அரசையே ஆட்டிப் படைக்கிறது—அப்படிப்பட்ட நாம், கேவலம், ஒரு முடிதாங்கியைக் கண்டு, எழுந்து நிற்பதா? கூடாது, கூடவே கூடாது. நாம் உட்கார்ந்தபடி இருந்தால் தான், நமது நிலையின் உயர்வுதெரியும், தரம் புரியும், குடி அரசுக் கோட்பாட்டுக்கு ஏற்றம் ஏற்படும், என் றெல்லாம் புயலார் எண்ணிக்கொண்டிருந்திருக்கக் கூடும்.

நாற்பத்தைந்து வயதிருக்கும் மன்னனுக்கு; நல்ல உயரம்; அறிவாளி என்பதைக் காட்டிடும் தோற்றம். கனிவுடன், கரங்களை நீட்டியபடி, புய லாரை நோக்கி வருகிருர்.

மன்: என் சிறிய அரண்மனைக்கு வந்திருக்கிறீர்—நல் வரவேற்பு, புயலாரே! அமருங்களேன்!!

[மன்னன், அமைச்சருக்குத் தரவேண்டிய உரிய மதிப்பைத் தரவேண்டி, வரவேற்பு கூறு கிருன். மன்னனைக் காண வருபவர்கள். மன்ன னைக் கண்டதும் எழுந்து நிற்பது வாடிக்கை யாக இருந்துவரும் மரியாதை முறை; அங்ஙனம் நிற்பவரை, அமருக! என்று அன்புடன் மன்னன் கூறுவதும் மரியாதை முறைகளிலே ஒன்று.

மன்னன், தனக்கென்று இருந்துவரும் மரி யாதை முறைப்படி, அமைச்சரை வரவேற்றபடி, அமருக! என்றுகூறினர். அமைச்சர்தான், வழக்க மான மரியாதை முறையைக் கையாள்வது தன் நிலைமையைக் குறைத்துவிடும், தாழ்வு மனப் பான்மையைக் காட்டும் என்று கருதி, எழுந் திருக்கவேயில்லையே. அதைக் கவனித்து விட்ட தாகக்கூட, மன்னன் காட்டிக்கொள்ளவில்லை. வழக்கமான மரியாதை முறை இருப்பது போலவே கருதிக்கொண்டு அமருக! என்கிருர்.]

அமை: நான் அமர்ந்துகொண்டுதான் இருக்கிறேன்.

மன்: உண்மை, புயலாரே! நான் அதைக் கவனிக்க வில்லை. மன்னித்துக் கொள்க! அமருக! என்று கூறிவிட்டேன்!! பழக்கம் அப்படி!

[தம்பி! மன்னன், எப்படிப்பட்டவன் என்பதை எடுத்துக்காட்ட இந்த ஒரு பேச்சு போதும் என்று கூறலாம்.

தேவையற்ற திமிர் என்றுதான், தெளிவுள்ள எவரும் கூறுவர், சாதாரண, வழக்கமான, மரி யாதையைக் காட்டக்கூட மறுத்திட்ட, அமைச் சரின் போக்கை.

ஆனல் அதைக் கண்டும் காணுதது போலிருந்து விட்டது மன்னனுடைய பெருந்தன்மையை மட்டு மல்ல, அவனுக்கு உள்ள 'எடை போடும்' திறமையை யும் நன்கு காட்டுகிறது

ஆணவம் தலைக்கேறிவிட்ட நிலை இவனுக்கு; எனவேதான், கஷ்டமோ நஷ்டமோ தராத, மிகமிகச் சாதாரணமான மரியாதை முறையைக்கூட கைக் கொள்ளாதிருக்கிருன். இத்தனை முடுக்கும், முறிவுக் குத்தான் வழி அமைக்கும்!

இவன், கொந்தளிக்கும் உள்ளம் கொண்டவனே யொழிய, நின்று நிதானித்து, காரியமாற்றி, நீங்காப் புகழ் பெறும் வாய்ப்பினைத் தேடிக் கொள்பவனல்ல. எனவே இவன், நாம், கவனிக்கத்தக்க பகைவன் அல்ல! என்றுதான், மன்னன் எண்ணிக்கொண்டிருந் திருப்பான்.

அமருக! என்று கூறினேன், அட அறிவிலி! மன் னர்கள் அங்ஙனம் கூறுவது முறை! அதற்குப் பிறகு அமருவதே, பழக்கமாக இருந்து வருகிறது! என்று, மன்னன் கடிந்துரைக்கவில்லை. மாருக. மன்னித் தருள்க, பழக்கத்தால் அங்ஙனம் கூறிவிட்டேன், என்று பேசினன்.

இங்கு அநேகர் வருகின்றனர், புயலாரே! அவர் கள் நான் நின்றுகொண்டிருக்கும்போது அமர்ந்து கொண்டிருக்கமாட்டார்கள்! அது பண்பு அல்ல என் பதால்! அவர்கள் நின்றுகொண்டிருக்க, நான் அமரு வதும், பண்பு அல்ல எனவேதான், நான் அமருக! என்று கூறுவது வழக்கம். இங்கு எப்போதும்போலத் தான், முறை தெரிந்தவர்கள், மரியாதை அறிந்தவர் கள், பண்பு புரிந்தவர்கள் வந்திருக்கிருர்கள் என்று எண்ணிக்கொண்டு வந்தேன். அவ்விதம் நான் எண் ணிக்கொண்டதால்தான், வந்தவர் நின்றுகொண்டு தானே இருப்பார் என்ற நினைப்பில், அமருக! என் றேன். பண்புடன் நடந்துகொள்வோருக்கு, நான் காட்டும் மரியாதை அது. தங்களுக்கு அது தேவை இல்லை என்பதை அறியாது போனேன்—அமருக! என்று கூறியதற்காக மன்னித்திடுக!—என்றன்ருே, கூறுகிருன் கொற்றவன்!!]

இதற்குள், அலுவலர், ஓர் நாற்காலியை, புய லாருக்குப் பக்கத்தில் போடுகிருர்—மன்னன் காட்டிய குறி கண்டு.

பண்பற்று, நீ நடந்துகொண்டாலும், நான் அங்ஙனம் நடந்துகொள்ளமாட்டேன், என்று இடித் துரைப்பதுபோல, மன்னன், புயலாரைப் பார்த்து,

"என்னை உட்கார அனுமதிக்கிறீர்களா?"— என்று கேட்கிருர்.

மன்னன் பாடம் புகட்டக் கையாண்ட நேர்த்தி யான இந்த முறை, அமைச்சர் புயலாருக்கு, புரிந்த தாகத் தெரியவில்லை. அவருக்கு இருந்த எண்ண மெல்லாம் ஒருவன் மன்னன் என்பதற்காக, நான் ஒரு தனி மரியாதையும் காட்டி என்னைத் தாழ்த்திக் கொள்ளமாட்டேன் என்பதுதான். எனவே, அமைச்சர்.

"அட உட்கார் ஐயா! உட்கார்! உன் வீட் டில்தானே நீ இருக்கிருய்.

> எனக்கு இந்தச் சம்பிரதாய உபசார முறைகள் கட்டோடு பிடிக்காது.

என்றுதான் பேச முடிகிறது.

மன்னனைக் காணச் சென்றேன்! நானென்ன, மற்ற மற்றவர்களைப்போல, நோஞ்சானா!! பல்லிளிக்கும் பேர்வழியா! மன்னன் அவன் என்றால் நான் மக்களின் தலைவன்! மன்னர்களின் மணிமுடியைப் பறித்தெடுத்து பந்தாடக்கூட உரிமையும் வலிமையும் பெற்றவன். வந்தான் மன்னன், அவனிடம் கூலி வாங்கிக்கொண்டு கிடக்கும் பயல்கள், மன்னர்! மன்னர்! என்று பயபக்தியுடன் கூறினர். அந்தச் சொல்லைக் கேட்ட உடனே, நான் நடுநடுங்கிப் போவேன், கூப்பிய கரத்துடன் நிற்பேன், என்று எண்ணிக்கொண்டார்கள் போலிருக்கிறது. நானா, என்னை விட ஒருவன் மேலானவன் என்பதை ஏற்றுக்கொள்வேன். என் வீரதீரம் எத்தகையது, அறிவாற்றல் எத்துணை சிறப்பானது! நான் மக்கள் தலைவன்! இவன் மன்னன்!! இவனைக்கண்டு நான் எழுந்திருக்கவில்லை, உட்கார்ந்தபடியேதான் இருந்தேன், மன்னன் திருதிருவென்று விழித்தான். கோபம் கொண்டு ஏதாகிலும் கேட்பான், செம்மையாகக் கொடுக்கலாம் என்று இருந்தேன். கோழை, வாயைத் திறந்தானில்லை, குழைந்து குழைந்து பேசினான்—என்று பொறிபறக்கப் பேசிடுவார் நமது மாசற்ற தலைவர் என்று புகழ்பாடிடும் கூட்டத்தினர் முன்பு புயலார், அவ்வளவே! வேறு உருவான, சுவையான, பயன் தரும் விளைவு எதுவும் ஏற்படாது, பண்பு மறந்த அந்தச் செயலால், மன்னன் 'எடைபோட்டு' இதனை அறிந்துகொண்டான்.

> இருபத்தைத்து ஆண்டுகளுக்கு முன்பு தாங்கள் தேர்தலில் ஈடுபட்டீர்களே, அப்போதிருந்தே நான் தங்கள் அரசியல் வாழ்க்கையைக் கவனித்து வந்திருக்கிறேன். இப்போது தங்களைக் காணும் வாய்ப்பு கிடைத்தது எனக்குப் பெருமகிழ்ச்சி தருகிறது.

காரணமற்ற மண்டைக்கனம் காட்டும் இந்த அமைச்சன், இரண்டொரு புகழுரைகளைப் பெற்றாலே. புத்தி தடுமாறி நிற்பான் என்பதைப் புரிந்துகொண்டு மட்டும், மன்னன் இதுபோலப் பேசினான் என்று கொள்வதற்கில்லை.

அரசுகளை ஆட்டிப்படைக்கும் ஆற்றல்பெற்றிப்பதாக எண்ணிக்கொண்டிருப்பவனே, நான் உன் போன்றவர்களின் நடவடிக்கைகளை அறிந்துவைத்துக் கொண்டுதான்இருக்கிறேன். ஏதுமறியாதவன் என்று என்னை எண்ணிக்கொள்ளாதே, முடிதாங்கியாக மட்டுமே இருக்கிறேன் என்று எண்ணிவிடாதே, நான், நாட்டிலே கிளம்பிடும் நானாவிதமானசுழல்களையும் கூர்ந்து கவனித்தவண்ணம் இருக்கிறேன்—எனவே, நிலைமையை அறிந்து நடந்துகொள்ளக் கூடியவன், அப்படிப்பட்ட என்னை வீழ்த்துவது எளிதான செயலல்ல என்பதைத் தெரிந்துகொள்—என்று கூறாமற் கூறுகிறான் மன்னன்!

இன்று அமைச்சனாகி அரண்மனைக்கு வந்திருக்கிறாய், என்னைக்காண! என்னைக்காண வந்திருக்கும் போதே என்னை அவமானப்படுத்துவதாக எண்ணிக்கொண்டு உன் சிறுமைக் குணத்தைதான் காட்டிவிட்டாய். இந்த அளவு உயர, இந்த நிலைபெற, இந்த இடம் பிடிக்க. நீ எத்தனை ஆண்டுகளாகப் பாடுபட்டு வந்திருக்கிறாய், என்னென்ன கரணம் எத்துணை 'கூட்டு'—யாராருடைய 'தயவு'-இவைகளைத் துணை கொண்டு, வளர்ந்திருக்கிறாய். இந்த வளர்ச்சியைக் காண, இருபத்தைந்து ஆண்டுகளுக்குமேல் உழன்று வந்திருக்கிறாய்—தெரியும் எனக்கு!!—என்று கேலிக் கசையடி அல்லவா தருகிறான் காவலன்.

இந்த உட்கருத்தினை அமைச்சர் கவனித்தாகத் தெரியவில்லை, மன்னன், இருபத்தைந்து ஆண்டுகளாகவே, தன்னைக் கவனித்து வந்திருப்பதாகக் கூறினார். அவ்வளவு பெருமதிப்பு நம்மிடம் மன்னருக்கு! நம்முடைய தரத்தையும்திறத்தையும் மன்னர் போற்றுகிறார்! புகழ்கிறார்!!—என்று மட்டுமே எண்ணிக்கொள்ள முடிகிறது அமைச்சனால், அவ்வளவுதான் முடிகிறது. மகிழ்ச்சியுடன், தன் பெருமையைத் தம்பட்டமடித்துக்கொள்கிறான்.

> ஆமாம் அரசே! கவனித்திருப்பீர். இரண்டொரு முறையாவது, நான் உங்களை உலுக்கிவிட்டிருப்பேன், அல்லவா!

என்று கூறுகிறான். புரட்சிவீரன், அவன் சொல், மன்னனை உலுக்கிவிட்டதாம்!

புன்னகை புரிகிறான் மன்னன், புகழ்மொழி இந்த புரட்சி வீரனை பூப்பந்தாக்கிவிடும் என்பது மன்னனுக்கு விளங்கிவிடுகிறது. அதே வழியில், அவனை இழுத்துச்செல்லி விரும்புகிறான். உலுக்கிவிட்டிருக்கிறேன் என்றுமட்டும்தானே கூறினான் அமைச்சன்: அரசன் மேலும் ஒருபடி சென்று,

> "தங்கள் முழக்கம், என் சிம்மாசனத்தையே பலமுறை ஆடச்செய்து விட்டிருக்கிறதே!"

என்று கூறுகிறான். இந்தப் புகழ்மொழி, அமைச்சருக்கு போதைஏறச் செய்துவிடுகிறது. மன்னனிடம் தனித்திருந்து பேசவேண்டும்: மனம்விட்டுப் பேச வேண்டும்; இவன் சாதாரண மன்னன் அல்ல; நமது ஆற்றலை அறிந்திருக்கிறான்' நமது தாக்கும் சக்தி இவனுக்குப் புரிந்துவிட்டிருக்கிறது; இவனிடம் நாம் மிகத் தாராளமாகப் பேசலாம் — என்றெல்லாம் தோன்றுகிறது, அலுவலர் இருவர் ஆங்கு இருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை.

> இவர்கள் இருவர் இங்கு உளர்! நாம் பேசுவதை எல்லாம் இவர்கள் கேட்டுக் கொண்டு இருப்பதா?

என்று கேட்கிறார் அமைச்சர்.

அமைச்சர் புயலார், எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற கோட்பாட்டுக்காரரர்! எனினும், அவர், மன்னனுடன் தனித்திருந்து அரசியல் விஷயம் பேச வேண்டுமே தவிர, கண்டவர்களின் முன்பு பேசுவது முறையல்ல, என்று எண்ணுகிறார்.

அவருடைய 'ஜனநாயகம்', எல்லோருக்கும், அல்ல! மன்னன் தன் மதிப்பை அறிந்து, தன்னிடம் அரசியல் விஷயமாகக் கலந்துபேசும் அளவுக்கு இருந்தால் போதும் என்று இருக்கிறது.

நாடாளும் மன்னன், அவனை எதிர்த்திடும் மக்கள் தலைவன், இந்த இருவர்கூடிப் பேசி நடத்துவதே ஜனநாயகமாக இருக்கவேண்டும் என்று எண்ணுகிறார்.

மன்னன் ஜனநாயகவாதியாகிருர் — அவர்கள் இருப்பதால் தவறு ஏதும் ஏற்பட்டுவிடாது என்கிருர். பிறகு உரையாடல் நடைபெறுகிறது.

அமை: இதுவரை மன்னர்கள் முன் எவரும் சொல்லிடாத விஷயங்களை நான் இப்போது சொல்லப் போகிறேன் என்பதை உணருகிறீரா?

மன்: மகிழ்ச்சி அமைச்சரே! மன்னர்களிடம் என்னென்ன சொல்லமுடியுமோ அவ்வளவும் சொல்லியாகிவிட்டதாகத்தான் நான் கருதுகிறேன். ஏதேனும் சிறு அளவு புதுமை இருப்பினும், மகிழ்ச்சி!

அமை: எச்சரிக்கிறேன் மன்னரே! தித்திப்புப் பேச்சல்ல! நான் வெளிப்படையாகப் பேசுபவன்.

மன்: தாங்களா? இல்லை! இல்லை! தாங்கள் ஒரு புதிர்! எப்போதுமே எனக்குத் தாங்கள் ஒரு புதிராகவே இருந்து வருகிறீர்.

தம்பி! இந்தப் பேச்சு, அமைச்சருக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது தன் சொல், செயல், இவற்றின் உட்பொருள், வலிவு, விளைவு இவைகளைப் பிறர் அறிந்துகொள்ளவே இயலாது, புதிர்போல் இருக்கும் தனது நடவடிக்கை, இன்னதுதான் என்று அறியாமல், எவரும் ஏமாந்து போவர். வீழ்ந்து போவர், என்று அமைச்சருக்கு உள்ளூற ஒரு எண்ணம். அடே, அப்பா! அவன் எமகாதகப் பேர்வழி! திட்டம் என்ன போடுகிறுன், வழி என்ன தேடுகிறுன் என்று கண்டுபிடிக்கவே முடியாதே! கடலாழம் காணலாம், இவன் கருத்தாழம் காண இயலாது எவராலும். இவன் ஓர் நடமாடும் புதிர்!—என்று தன்னைப் பற்றி எவரும் பேசவேண்டும்—புகழிலே இதற்கு நிகர் வேறு இல்லை—என்ற எண்ணம் இந்த அமைச்சருக்கு என்பதைக் கண்டுகொண்டுதான் மன்னன், அந்த நரம்பைத் தொட்டான். அமைச்சருக்கு அளவற்ற திருப்தி—மகிழ்ச்சி—புன்னகையை அடக்கிக்கொள்ளவே முடியவில்லை — ஏன் இந்தப் புகழ்மொழி! அப்படி எல்லாம் இல்லை! நான் சாதாரணம்—சாமான்யன்—புதிர் அல்ல—என்று கூற இயலவில்லை.

ஆமாம்—ஒரு விதத்தில் உண்மைதான். நான் ஒரு புதிர்தான்!

என்று தன்னைத்தானே தட்டிக் கொடுத்துக் கொள்கிருன். மன்னன், உள்ளூறச் சிரித்திருப்பான்!

புதிர் போலிருக்கும் உம்மைப் புரிந்து கொள்ள முடியவில்லை — முயற்சித்தும், விளக்கமாகப் பேசும் அமைச்சரே!

ஆம்! வெளிப்படையாகத்தான் பேச வந்திருக்கிறேன். முதலிலே இதை அறிந்து கொள்ளும், இந்த நாட்டை நீர் அல்ல, உமது அமைச்சர்கள் ஆளவேண்டும்.

கடினமான ஆட்சிப் பொறுப்பை அமைச்சர்கள் என் கரத்திலிருந்து எடுத்துக் கொண்டு பார்த்துக் கொள்வதற்கு நான் அவர்களுக்கு நன்றி கூறுவேன்.

உம் கரத்தில் இருப்பதாகச் சொல்வது தவறு. உமது அமைச்சர்களின் கரத்தில் ஆட்சிப் பொறுப்பு இருக்கிறது. கட்டுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் காவலன், நீர்!



தெரிகிறதா? பெல்ஜியத்தில் இந்த முறையை என்ன பெயரிட்டுச் சொல்கிருர்கள் தெரியுமா?

ரப்பர் ஸ்டாம்ப்! மந்திரி கை முத்திரை என்பார்கள்!

ஆமாம், மன்னவா! ஒரு ரப்பர் ஸ்டாம்புதான். அப்படித்தான் நீர் இருந்தாக வேண்டும்.

ஆமாம், நாம் அப்படித்தான் ஆகிவிட்டிருக்கிறேம்.

அதென்ன, 'நாம்' என்கிறீர்? என்ன பொருள்?

நம்மிடம் காகிதங்களைக் கொண்டு வருகிருர்கள். கை எழுத்திடுகிறேம். அவைகளைப் படிக்க அமைச்சர்களாகிய உமக்கு நேரம் இல்லை. அது நல்லது. ஆனல், நான் எல்லாவற்றையும் படித்தாக வேண்டும் என்று எதிர்பார்க்கிருர்கள். விருப்பம் இருக்கிறதோ இல்லையோ, சரியோ தவருே. கையொப்பமிட வேண்டும். குற்றமற்றவர்களுக்குக்கூடத் தூக்குத் தண்டனை தரப்பட்டிருக்கும், நான் கையொப்பமிட வேண்டும். தூக்குத் தண்டனை தரவேண்டிய குற்றம் செய்திருப்பார்கள். சிலர், தண்டனை தர எனக்கு அதிகாரம் இல்லை.

ஒஹோ! கொண்டு வா அவனுடைய தலையை என்று கொக்கரித்த காலம் திரும்பி வரவேண்டும் என்கிறீரா?

தம்பி! உரையாடலின்போதே, மன்னவ், அமைச்சரின் உள்ளக் கிடக்கையை புரிந்து கொள்கிருன்.

அமைச்சரே! நான் மன்னனுக இருப்பதிலே ஒரு பிரமாதமும் இல்லே. அரச குடும்பத்தவன், அரசன் ஆனேன், மற்ற வாரிசுகள் செத்ததால். ஆனுல் உங்கள் பெருமையே பெருமை. சாமான்யக் குடும்பம்! வறுமை சூழ்ந்த இளமை, உழைப்பாலும், அறிவுத் திறத்தாலும் உயர்ந்து, நாடாளும் அமைச்சரானீர், மன்னராக இருக்கிறேன், என்ன பலன்? குடிஅரசுத் தலேவராக இருப்பின், எவ்வளவு நிரம்பிய அதிகாரம் கிடைக்கும்! தாங்களே அப்படி, குடிஅரசுத் தலேவராகப் போவதாகவும் கூறுகிருர்கள்—என்று மன்னன், தேன்துளிகளாக்குகிருன் வார்த்தைகளே, சுவைத்து இன்புறுகிருர் அமைச்சர்.

அதென்ன குடிஅரசுத் தலேவராளுல் வலிவும் பொலிவும் அதிகம் என்கிறீர்! அப்படியாளுல் மன்னனுத இருப்பதைவிட குடிஅரசுத் தலேவராவதைத்தாளு மேலானது என்று கருதி விரும்புகிறீர்—என்று கேட்கிருர் அமைச்சர்.

அப்படிச் சொல்வதற்கில்லே. அரசனுக இருப்பவர்களுக்கு அதிகாரம் இல்லேயே தவிர, அவர்கள் அரசராக இருக்கும்போது, பாதுகாப்பு நிரம்ப இருக்கிறது. ஜனநாயக முறைப்படி தலேவர்களாக வருகிறவர்களுக்கு அந்தப் பாதுகாப்பு இல்லே. போற்றுகிற மக்களே தூற்றிக் கீழே இறக்கிவிடலாம். போட்டி ஏற்பட்டு தலேமைப் பதவி போய்விடலாம். வேறு ஒரு தலேவன் தோன்றி, அதிக தீவிரம் பேசி, மக்களேத் தன்பக்கம் அழைத்துக் கொள்ளலாம். அப்போது பழைய தலேவர் பாடு ஆபத்தாகிப் போகும். மன்னன் என்ருல் அந்த ஆபத்து இல்லே. நிம்மதி இருக்கும். பாதுகாப்பு இருக்கும். அதிகாரம் இருக்காது, பரவாயில்லே; ஆபத்தும் இல்லே அல்லவா?

மன்னன், எடுத்துக் காட்டியது, மறுக்க முடியாத உண்மை என்பது அமைச்சருக்குப் புரிகிறது! புரிகிற காரணத்தாலேயே அச்சமும் ஏற்படுகிறது.

ஜனநாயக முறையிலே ஈடுபட்டுத் தலேவர்களாக அமைச்சர்களாக, உயர்ந்துவிடுவதாலேயே, மண்டைக் கனம் கொண்டு விடாதீர்கள், ஆபத்து எந்த நேரத்திலும் உமது பதவிக்கு, செல்வாக்குக்கு, தலேமைக்கு ஏற்படலாம்! மக்களின் மனம் மாறிவிடக்கூடும்—வீழ்ச்சி ஏற்பட்டுவிடும். எனவே அமைச்சர் என்ற நிலே கிடைத்ததும், இந்த உயர் இடம் என்றென்றைக்கும் இருக்கும், நம்மை மிஞ்சுவார் இல்லே, என்று எண்ணி இறுமாப்பு அடையாதீர். தலேக்கு மேல் ஆபத்து இருக்கிறது! அதைத் தெரிந்து, இந்தப் பதவி நிலேயில்லாதது, இந்தச் செல்வாக்கு சரிந்து போகக்கூடியது என்பதை உணர்ந்து, பக்குவமாக, பண்போடு நடந்து கொள்வதுதான் அறிவுடமை. — என்று மன்னன், இலேமறை காய் முறையில் எடுத்துக் கூறுகிருன்.

நுழைந்தபோது இருந்த முடுக்கு, வெகுவாகக் குறைந்துதானே போகும், மறுக்கமுடியாத 'உண்மையினே மன்னன் எடுத்துச் சொன்ன பிறகு.

மன்னன் மகள் அங்கு வருகிருள். மன்னன் வந்தபோது மரியாதை காட்டுவது வலிவற்ற தன்மையைக் காட்டுவதாகும் என்று எண்ணி, எழுந்து நிற்காதிருந்த அமைச்சர், மன்னன், தன் மகளே அறிமுகப்படுத்தியபோது, முக மலர்ச்சியுடன், எழுந்திருந்து, கனிவுடன் கைகுலுக்குகிருன், அரசகுமாரியுடன், அரச குமாரி, அவன் ஆடையைக்கூட, சரியில்லே என்று சுட்டிக் காட்டிக் கேலி செய்கிருள். ஒரு விநாடி, அமைச்சருக்கு, 'சூடு' பிறக்கிறது. இது உழைப்பாளியின் உடை அரசகுமாரி! உத்தமரின் உடை! இதை அணிந்துகொள்வதிலே நான் பெருமை கொள்கிறேன்! — என்று முழக்கம் எழுப்புகிருன், அரசகுமாரி வாதாடவில்லே.

அதெல்லாம் சரி. அப்படித்தான் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனுல் உமக்கு உடை ஒத்துவரவில்லே. உம்மைப் பார்த்த உடனே, எவரும் சொல்லிவிடுவார்களே, ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர் இவர், என்று. உமக்கு ஏன், உழைப்பாளி உடை?

அரசகுமாரி, இவ்விதம் பேசக் கேட்டு அமைச்சருக்கு கோபம் வரவில்லே.

ஒருவிதத்தில் தாங்கள் சொல்வது சரிதான்.

என்று குழைந்து பேசத்தான் முடிகிறது.

மன்னன், மகளே அழைத்துக்கொண்டு செல்கிருன், மற்ருேர் சமயம் பேசலாம் என்று அமைச்சரிடம் கூறிவிட்டு.

அமைச்சர், சென்று வருக! என்று மரியாதையாகக் கூறுகிருர்.

அவர்கள் சென்ற பிறகு, அலுவலரிடம், அமைச்சர்,

"என்னதான் சொல்லு, மன்னன், மதியிலி அல்ல"

என்று கூறுகிருன்.

மிரட்ட வந்தான் மன்னனே; மன்னன், அந்த அமைச்சரை மயக்கிவிட்டான்.

ஆணவமாக நடந்து அரசனே அவமதிக்க வேண்டும் என்று திட்டமிட்டு நடந்துகொண்டான் அமைச்சன்; இரண்டொரு உண்மைகளேக் கூறியும், உச்சி குளிரும்படி சில புகழுரை பேசியும், தாக்கவந்த அமைச்சனே தழதழத்த குரலிற் பேசுவோனுக்கிவிட்டான், மன்னன்.

மன்னன் மதிமிக்கவன்; மன்னராட்சியுடன் இணைந்த மக்களாட்சியில் இடம் பெற்ற அமைச்சனே, மண்டைக் கனத்தை மட்டுமே நம்பிக் கிடந்தான். பிறகு? என்று கேட்கிருய் தம்பி!

எனக்கு இந்த "ராஜா" வேலே வேண்டாம்; விலகிவிடப் போகிறேன் — என்று மன்னன் கூறுகிருன், இந்த அமைச்சர் மட்டுமல்ல, முதலமைச்சர் உட்பட அமைச்சர் அவையே கூடி, மன்னனே மன்ருடிக் கேட்டுக்கொள்கிறது, மன்னு! மன்னனுகவே வீற்றிருக்க வேண்டுகிறேம்!!—என்று.

மன்னன் என்ன செய்தான் மேலால் என்று அறிய வேண்டுகிருய். ஆகட்டும் தம்பி! அடுத்த கிழமை.

அண்ணன்,

அண்ணாதுரை

கண்ணியம் மறைந்தது!!

காயிதேமில்லத் மறைந்து விட்டார்; காலத்தின் கருணையற்ற வரலாறு தொடர்ந்திடத்தான் செய்யுமா? தன்னைக்காக்கும் தலைமக்களை இழந்து தமிழன்னை துடிக்கத்தான் வேண்டுமா? அவள் சிந்திடும் கண்ணீர் ஓட்டத்தில் அருளற்ற காலம் ஆனந்த நீச்சல் அடிக்கத்தான் வேண்டுமா? அழுதழுது சிவப்பேறிய கண்கள் தமிழனுடையதாகத்தான் இருக்க வேண்டுமா?

ஓ, கொடுமையின் உருவே! உன்னிடமிருந்துதான் நாடு விடையை எதிர்பார்க்கிறது!! உத்தமர்களின் உயிர்கள் உனக்கு அவ்வளவு தித்திப்பாகவா இருக்கின்றன?

‘சமுதாயத்தின் வழிகாட்டி’ என்று இந்திய முசுலீம் பெருங்குடிமக்கள் ஏற்றுக்கொண்டு, நெஞ்சம் இனிக்க, ‘காயிதேமில்லத்’ எனச்சொல்லிச் சொல்லிச் சுவைத்தார்களே அந்தக் கண்ணியத்திருவுருவினையா நீ அணைத்துக்கொண்டாய்!! அந்தத் திருவிளக்கையா உன்எரிமூச்சால் இல்லாதாக்கிவிட்டாய்?!

அதோ! அல்லா! ... அல்லா என்று அலறித்துடிக்கும் கோடிக் கணக்கான குரல்களுக்குரியவர்களின் கொந்தளிக்கும் உணர்ச்சிக்கு யாரால் தடையிடமுடியும்? அவர்களுக்கு ஆறுதல் கூறுவார் எவர்?

நெஞ்சம் போல் உயர்ந்த நெடிய உருவும்’ முகத்தில் கொஞ்சிவிளையாடும் குளிர்ந்த விழிகளும், வெளுத்தும் கருத்தும் வெட்டிவிடப்பட்டும் காட்சிதந்து, தகுதியின் விளக்கமாகமார்பில் தவழ்ந்த தாடியும், தமிழ்ச்சிரிப்பும் கொண்ட தலைவன் இன்றில்லையே, காண்பது இனியில்லையே என்று எண்ணும் போது, ‘ஐயோ, இரும்பால் இதயம் ஆக்கப்படவில்லையே’’ என்று ஏக்கங்கொள்ளவேண்டியுள்ளது!!

“அடக்கம், அமைதி, பெருந்தன்மை, விவேகம் ஆகிய அத்தனையும் நிறைந்த அவரது பேச்சில் நாற்பதாண்டுகளின் அரசியல் வரலாறு பொதிந்து கிடக்கின்றது’’ என்று 1965 ஆம் ஆண்டு ஜனவரி 3 ஆம்நாள் வேலூரில் நடைபெற்ற முஸ்லீம்லீக் மாநாட்டில், அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி மகிழ்ந்தாரே அந்த அரசியல் மேதை நம்மை அழுகைக்கடலாக்கிவிட்டு, அவர்அமைதிக் கடலுல் ஆழ்ந்துவிட்டார்.

அன்றொரு நாள், அரசியல் நிர்ணய சபையில் “இந்திதான் ஆட்சி மொழியாக இருத்தல் வேண்டும்’’ என்று கூக்குரல்—கூட்டுக் குரல் எழுந்தபோது, மாணிக்கக் குரலில், நெஞ்சை நிமிர்த்து “இந்த நாட்டின் ஆட்சி மொழியாக வரும் மொழி தொன்மையும், இலக்கிய இலக்கண வளமும் கொண்டதாக இருக்கவேண்டும். அத்தனைத் தகுதிகளும் கொண்ட அந்த மொழி, எனது தாய்மொழியான தமிழ் மொழிதான். எனவே என் அன்னை மொழியே இந்நாட்டின் ஆட்சி மொழியாக வரவேண்டும்’’ என்று முழக்கமிட்ட தலைமகனைத் தமிழ் மகனை என்றைக்குக் காண்போம் என்று நினைக்கும்போது, “ஐயோ, இந்த நெஞ்சே இல்லாமற் போகக் கூடாதா?’’ என்று எண்ணத் தோன்றுகிறது!!

புலவர் அரிமதி தென்னகன்

இந்திய மண்ணை எச்சிலாக்க சீன நாக்கு நீண்டபோது நாடாளுமன்றத்தில் “நேரு மகனே! என் ஒரு மகனைப் போருக் கனுப்பிப் பகையைப் புறங் காணப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்’’ என்று புதிய புறநானூறு படைத்த புரட்சித் தலைவனை இழந்து நிற்கும் இந்நாட்டு முசுலீம் மக்களுக்கு வேறு எவரைக் காட்டி ஆறுதல் சொல்ல முடியும்?

கராய்ச்சியில் நடந்த மாநாட்டில், “இந்திய முசுலீம்களைப் பற்றி வெளிநாட்டில் உள்ளவர்கள் கவலைப்பட வேண்டாம்; நாங்கள் பாதுகாப்புடனேயே இருக்கின்றோம்’’ என்று ஈடிணையற்ற இந்தியத் தலைமகனாக நின்றாரே, அவரை இழந்து நிற்கும் இந்நாட்டு மக்களுக்கு வேறு எவரைக் கூறி தேறுதல் கூற முடியும்?

மதத்தால் நான் இசுலாமியனே தவிர, நாட்டால் இந்தியன், இனத்தாலும் மொழியாலும் நான் தமிழனே என்று வாழ்ந்த சிங்கத் தமிழனை இழந்துவிட்ட தமிழகத்தார்க்கு, இந்நாட்டுப் பத்து கோடி முசுலீம்களின் கண்ணீரைத் துடைக்கும் ஆற்றல் உண்டா?

கண்ணீரால் கண்ணீரைத் துடைக்க முடியுமா?

தமிழகத்தில் பிறந்து, கேரள மஞ்சேரி தொகுதியில் செல்லாமலும், செலவுஇல்லாமலும் வென்று நாடாளுமன்றம் சென்றாரே, அந்த நாயகரை இனி அவர்களால் அனுப்பமுடியாதே!! மஞ்சேரி மக்களின் நெஞ்சக் கொடியில் பூக்கும் அன்புப் பூக்களை இனி அவர்களால் ஆரமாகத் தொடுக்க முடியுமா? சூடிக்கொள்ள காயிதே மில்லத் இல்லாதபோது அவர்களால் தொடுக்கத்தான் முடியுமா?

‘ஐயோ! அம்மா!’ என்று அலறிடத்தான் முடியுமே தவிர என் ஆசையில் மண்ணிட முடியுமா என்று அறைகூவல் விடுக்கும் சாவின் சர்வாதிகாரத்திற்கு முடிவே கிடையாதா?

“போற்றுங்கள், புகழுங்கள், பூமாலை சூட்டுங்கள், என்கையில் அடக்கப்படும் உங்கள் அன்புத் தலைவனை மீட்க மட்டும் உங்களால் முடியாதே’’ என்று எக்காளமிடும் இறப்பென்னும் பேயின் ஈன மனதிற்கு நிறைவே கிடையாதா?

“விஞ்ஞானமாம்! விஞ்ஞானம்!! உலகே விஞ்ஞானத்தின் உள்ளங்கையிலாம்! எங்கே பார்க்கலாம். உங்கள் விஞ்ஞானத்தினைக் கொண்டு, உங்கள் உள்ளங்கவர்ந்த ஒருவரை என் பிடியிலிருந்து காப்பாற்றச் சொல்லுங்கள்; கோடி பேர் சாகத் தயாராக இருக்கின்றீர்களே; அத்தனைபேரும் செத்து உங்கள் அன்புக்குரியவரைக் காப்பாற்றுங்களேன் பார்க்கலாம்’’ என்று ஊழிக் கூத்தாடும் காலதேவனின் கருத்தை மாற்றுவோரே கிடையாதா?

“முடியாது; கிடையாது என்பதுதான் விடையென்றால் எங்களுக்கு வழிகாட்டுவோர் யாவர்? எங்களைக் காப்பாற்றிக் கரையேற்றுவோர் யாவர்?’’ என்று நம் நெஞ்சங்கள் கேள்விக்குறிகளாக வேண்டியதுதானா!!

இதற்கொரு விடை கண்டாக வேண்டும்!! நம்மை விட்டுப் பிரிந்த நல்லோர்களின் மீது ஆணையிட்டு உறுதி ஏற்போம்!!

(12-ஆம் பக்கம் பார்க்க)

அவர் ஒரு சகாப்தம்!

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்த தமிழகத்தில் புரட்சிப் புயல் வீசச் செய்த புத்துலகச் சிற்பி தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவுக் கொள்கைகளை பட்டிதொட்டியெல்லாம் பரப்பிய ஒப்புயர்வற்ற பெருமை அண்ணன் சிந்தனைச் சிற்பி சி. பி. சி. அவர்களுக்கும் உண்டு என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

பொதுப்பணி - மக்கள்தொண்டு என்பது இடர் மிகுந்ததாகவும்—இன்னல் நிறைந்ததாகவும் இருந்த இருட் காலத்தில், எந்தச் சந்தர்ப்பத்திலும்—எந்தச் சூழ்நிலையிலும் எந்தவிதமான பயங்கரமும் கொடுமைகளும் நடக்கலாம் என்றிருந்த நேரத்தில், எதிர்ப்புக்கும் ஏசலுக்கும் அஞ்சாமல்—புகழ்ச்சிக்கும் பூசலுக்கும் மண்டியிடாமல் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, நான்கு கோடி தமிழர்களின் நல் வாழ்விற்காக அரும் பெரும் பணி ஆற்றிவரும் அண்ணன் சி.பி.சி. அவர்களுக்கு இன்று வயது அறுபத்து ஆறு.

மிகச் சிறந்த எழுத்தாளராகவும் நாவன்மை நன்கு வாய்க்கப் பெற்ற தேர்ந்த சொற்பொழிவாளராகவும் விளங்கும் சிந்தனைச் சிற்பி அவர்கள் பேசப்புகும் எந்தப் பொருளைப் பற்றியும்—தெளிவாகவும்—விளக்கமாகவும், திட்பமாகவும் — நுட்பமாகவும், விளக்குவதில் ஈடும் எடுப்புமற்ற திறன் வாய்க்கப் பெற்றவர் என்பது அனைவரும் ஒப்புக்கொண்ட உண்மையாகும்!

சொற்பொழிவாளர்களுக்கு அதிமுக்கியமாக அமைந்திருக்க வேண்டிய பண்பு, உணர்ச்சி. உணர்ச்சியற்ற சொற்பொழிவு சாரமற்ற சக்கையாகும்!

“உணர்ச்சி — உள்ளத் துடிப்பு இவற்றை அடிப்படையாகக் கொண்டு எழும் பேச்சு சரசர வென்று ஓடிவரும். கூவிப் பேச வேண்டாம். உணர்ச்சிதான் பேச்சு. உணர்ச்சி உள்ள இடத்தில் பேச்சு உண்டு” என்கிறார் முத்தமிழ்க் காவலர் விசுவநாதம் அவர்கள். “உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்” என்பது பாரதியின் வாக்கு.

தான் எண்ணியகருத்தினை திறம்படவும் - நயமாகவும் - அழகாகவும் இனிமையாகவும் ஆற்றலுடனும் ஆவேசத்துடனும் எழில்பட எடுத்துக் கூறுவதில் சிந்தனைச் சிற்பி சி. பி. சி. அவர்கள் தனித்திறன் வாய்க்கப் பெற்றவர் என்பதை யார்தான் மறுத்துவிட முடியும்?

எளிமையான குடும்பத்தில் பிறந்து முயற்சியில் சிறந்து, கல்வியில் உயர்ந்து, கருத்தினில் தெளிந்து, அறிவினில் உயர்ந்து, தொண்டினில் மூழ்கித் திளைத்து, புகழினில் நிலைத்து நிற்கும் அண்ணன் சி. பி. சி. அவர்கள், பொறுப்புடனும்—சிறப்புடனும், பொது நலத் தொண்டில் பொன்றாப் புகழுடன் விளங்குவது அவர்தம் பண்பட்ட உள்ளத்திற்கு எடுத்துக் காட்டு ஆகும்!

உலகமகா வீரன் ஷெல்லியின் கவிதையின் நயமும்,

பகுத்தறிவு மேதை இங்கர்சாலின் இடி முழக்கமும்,

எழுத்து வேந்தன் ரூசோவின் சொல்லாட்சித் திறமையும்,

டார்வினின் ஆராய்ச்சித் திறனும், காரல் மார்க்சின் தத்துவ சிந்தனையும் அரும்பி அலர்ந்து மணம் வீசுகின்றது சிந்தனைச் சிற்பியின் பேச்சிலும் எழுத்திலும்!

தமிழகத்தின் தாழ்வகற்ற வந்த புரட்சி வீரர் அவர்!

அடர்ந்தெழு எதிர்ப்புகள் பலவற்றையும் மறித்து நின்ற மாவீரர்!

சொற்போர் களம்பல வென்று நின்ற தீரர்!

சிங்க ஏறென முழங்கி நாடுநகரமெல்லாம் சுற்றிச் சுழன்று வந்த திண்ணியர்!

சுய மரியாதை இயக்கத்தின் தூதுவர்!

பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புவதிலே பற்று மிகக்கொண்ட பண்பாளர்!

தொண்டர்களின் தோழர்!

அண்டினோர்க்கு ஆதரவு அளிக்கும் அருளாளர்!

அஞ்சாநெஞ்சு வாய்க்கப் பெற்ற ஆண்மையாளர்!

சிந்தனைச் சிற்பி சி.பி.சி. வாழ்க! வாழ்க!!

அவர்தம் தொண்டு வெல்க! வெல்க!! *

—கலவை. பா. வரதன்

(11-ஆம் பக்கத் தொடர்ச்சி)

“உங்களை அழைத்துக்கொண்டு, எங்களை அநாதைகளாக்கிய காலதேவனைப் பழிக்குப்பழி வாங்கியே தீருவோம். உங்களைப் போன்று ஊருக்கு உழைப்போரின் தொகையை மிகுதியாக உருவாக்கி, யாரை அழைப்பதென காலதேவனைத் திகைக்க வைப்போம்!! நீங்கள் சென்ற வழியில் தொடர்ந்து சென்று காலதேவனை நடுங்கவைப்போம்!!

நீங்கள் விட்டுச் சென்றுள்ள பணிகளை நிறைவேற்றி, ‘ஐயோ ஏமாந்தேன்’ என்று காலதேவனை அழ வைப்போம்!!

வெல்க காயிதே மில்லத் நெறிகள்!!

வாழ்க காயிதே மில்லத் திருப்பெயர்!!

வளர்க காயிதே மில்லத் புகழ்!!

★

மாண்புமிகு சிசுவின் அரிய கண்டுபிடிப்பு!

(புலவர் மணிமுடிச் சோழன்)

இராச இராசனைக் கண்டதுண்டா? அவனைப் பற்றிய குறிப்புக்கள் உண்டா?

—என்று கேட்டிருக்கிறார் மத்திய அமைச்சர் சுப்பிரமணியம்.

அவரது வரலாற்று அறிவுக்கு இந்த கட்டுரை காணிக்கையாக்கப்படுகிறது.

ஒழுங்கான வரலாற்றை எழுதி வைக்காமல் போன தமிழக மன்னர்களைப் பற்றி, அதிக அக்கறையோடு ஆராய்ந்தறிந்த 'வரலாற்றின் தந்தை' திட்ட அமைச்சர் திரு. சுப்பிரமணியமே என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்கவேமுடியாது என்பது மட்டுமல்ல, இனி இருக்கவும் கூடாது என்பதுதான் நாடறிய வேண்டிய உண்மையாகும்: தமிழக வரலாற்றைத் துருவித் துருவி ஆராய்ந்து, ஆங்காங்கே கிடைத்த தடையங்களை எல்லாம் முறைப்படுத்தி, அமைதியாக, ஆழ்ந்து சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்துவிட்டு, அவற்றையெல்லாம் ஒரு நூலாக வெளியிட்டு, இந்த உலகின் பார்வைக்கு உலாவர விட்டிருக்கின்ற பேரறிஞர், மாண்புமிகு சுப்பிரமணியம் என்பதனை இந்த நாடும் உலகமும் நன்றாக அறியும்.

மதிப்புக்குரிய திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், மாண்புமிகு சுப்பிரமணியம் அவர்களை, பொருளாதாரத்தில் மாமேதை என்று எண்ணிக்கொண்டு, திட்ட அமைச்சராக்கி நல்ல வரலாற்று வல்லுநரை முடக்கிப் போட்டுவிட்டது எவ்வளவு பெரிய முட்டாள்தனமான செயல் என்பதனை, சரியான நேரத்தில், பச்சையாகவே மெய்ப்பித்துக் காட்டவே இராசராசனைப் பற்றிய அவரது ஆராய்ச்சியின் முடிவினை திட்டவட்டமாக பொதுக்கூட்டம் ஒன்றில் வெளியிட்டுள்ளார்.

'உலகிலேயே மிகப் பெரிய கோயில் என்று பிரிட்டன் பல்கலைக் கழகத்தின் கலைக் களஞ்சியம் பாராட்டுகின்ற—தஞ்சை பெரிய கோயிலைக் கட்டுவித்த "இராசராசனைக் கண்டவர் யார்? அவனைப் பற்றி, தமிழக அரசிடம் குறிப்புகள் உண்டா?" என்ற கேள்விக் கணைகளை அடுக்கடுக்காக அள்ளி வீசியுள்ளார் என்பதனை நாள் ஏடுகளில் கண்டு நாடே மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் தவித்ததை அறிவோம்.

இடிபாடுகளுக் கிடையில், ஆங்காங்கே சிக்கிச் சிதைந்து சீரழிந்து கிடக்கின்ற கல்வெட்டுகளையும், மண்மூடிக் கிடக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க சமவெளிகளையும், அக்கறையோடும், ஆர்வத்தோடும், தன்னந் தனியராகவே நின்று, தோண்டியெடுத்துப் பார்த்ததன் விளைவாகவே, "இராசராசனின் உருவத்தை யார் பார்த்தது? எல்லாம் சுத்தப் பொய்" என்ற முடிவை வாரி வழங்கியிருக்கின்றார் என்றால், மிகையல்ல. அந்த அரிய முயற்சியை, ஆர்வத் துடிப்பை, ஆராய்ச்சி முடிவை, இந்தத் தமிழகம் அப்படியே ஏற்றுக்கொண்டு, போற்றிப் புகழ்ந்து பாராட்டாமல் போகுமானால், நன்றி கெட்டவர் தமிழரென்ற பெயரல்லவா நாளைய உலகில் தஞ்சை பெரிய கோயிலைப் போலவே நின்று நிலைத்துவிடும்! ஆகவே 'ஆராய்ச்சி அறிஞர்' மாண்புமிகு. 'சிசு'வின் முடிவை கொஞ்சங்கூட மாற்றிவிடாமல், மறுத்துரைக்காமல் ஏற்றுக்கொள்வதுதான் என்னைப் போன்றவர்களுக்கும் ஏன்? தமிழர்களுக்கும் தலையாய கடமையாகும்!

"உடையார் 'ஸ்ரீராசராசீச்சரம் உடையார்க்கு ஸ்ரீகாரியஞ் செய்கின்ற பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான், ஸ்ரீராசராசீச்சரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்தொன்பதாவது வரை எழுந்தருளிவித்த செப்புப் பதிமங்கள்...பாதாதி கேசாந்ம்த ஒரு முழமே நால் விரலரை உசரத்து இரண்டு திருக்கை புடையராகக் கனமாக எழுந்தருளிவித்த பெரிய பெருமாள் (இராசராசன்) பிரதிமம் ஒன்று... ......" (S. I. I. Vol II. P. 155)

என்று தஞ்சைப் பெரிய கோயிலின் கல்வெட்டு கூறுகிறதே; இராசராசனின் திருஉருவப் படிமம் ஒன்று இருப்பதைப் பற்றி, அதெல்லாம் பொய்யா?' என்று கல்வெட்டறிந்தவர்கள் கேட்டுவிடக்கூடாது. காரணம், அந்தக் கல்வெட்டு 'மாம்பலத்து திடீர் பிள்ளையாரைப் போல,' கலைஞர் அவர்களால், இரவோடு இரவாக சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன் வெட்டப்பட்டது என்பது வரலாறு ஆசிரியர்களுக்குத் தெரியாது!

இன்னும் தஞ்சை பெரிய கோயிலின் விழா நாட்களில். இராசராசனின் திருஉருவப் படிமம் உற்சவ மூர்த்தியாக உலா வருகிறதே அதை நீங்கள் பார்த்ததில்லையா? என்று தஞ்சைமக்கள் யாரும் கேட்கக்கூடாது. அதுகூட கலைஞர் அவர்களின் திரு உருவப் படிமமே ஒழிய உண்மையில் இராசராசன் தன்னை அப்படியொன்றும் விளம்பரப் படுத்திக் கொண்டதில்லை என்று திரு. சுப்பிரமணியம் அவர்கள், வரலாற்றை பல முறை ஆராய்ந்து பார்த்துச் சொல்லி விட்டாரே! எனவே, இனி தஞ்சை மக்கள் அது இராசராசனின் திருஉருவபடிமம் என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்க வேண்டாம்.

"நம்மையுடைய சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ ராசராசதேவர் இவ்வூர் திருவிசலூர் மகாதேவர் ஸ்ரீ கோயிலிலே துலாபாரம் புக்கருளின அன்று நம் பிராட்டியார் தந்திசக்தி விடங்கியார் (உலோகமாதேவி) இரணியகருப்பம் புக்கருளி........... என்று கும்பகோணத்திற்குப் பக்கத்திலேயுள்ள திருவியலூர் கோயிலில் இராசராசன், உலோகமாதேவியார், இருவரின் சிற்பத்திற்குக் கீழே வெட்டப்பட்டுள்ள கல்வெட்டும் இராசராசனின் உருவச்சிலையும் மெய்யானது என்று நீங்கள் நினைத்து விடக்கூடாது. மாண்புமிகு திட்ட அமைச்சர், சுப்பிரமணியமே இராசராசனைப் பார்த்தது யார்? அவனுக்கு உருவ

சிறப்புக் கட்டுரை!

முண்டா? இல்லையே! என்று சொல்லிவிட்ட பிறகும், அப்படி யாராவது நினைத்தால் அது அவர்களுடைய முட்டாள்தனமே ஒழிய வேறொன்றுமில்லை.

“I have examined the paintings round the garbha-graha the Tanjore temple; it seems possible that a stalwart royal figure which recurs in many of those groups as **the central figure is that of Rajaraja himself-and that the paintings are as old as the temple”** என்று பேராசிரியர், நீலகண்ட சாஸ்திரி அவர்கள், தஞ்சை பெரிய கோயிலின் மூலஸ்தானத்தில் உள்ள ஓவியங்களை ஆராய்ந்து பார்த்துவிட்டு, அதில் இராசராசனின் உருவ ஓவியம் இருப்பதைப் பற்றி குறிப்பிட்டு, பெரிய கோயில் எவ்வளவு பழமையானதோ அவ்வளவு பழமையானதே அந்த ஓவியங்களும் என்று கூறுகின்றாரே! ஆராய்ச்சியாளர் திரு. S. K. கோவிந்தசாமி அவர்களும், அந்த ஓவியங்களைப் பற்றி ஆராய்ந்து, 1934இல் எழுதியிருக்கிறாரே! அது எப்படி பொய்யாக முடியும் என்று அசட்டுத்தனமாக யாரும் கேட்கக் கூடாது. காரணம், கலைஞர் அவர்கள்தான் கிட்டத்தட்ட தனது ஒன்பதாவது வயதிலேயே அவர்களை அப்படி எழுதி வைக்குமாறு அச்சுறுத்தியிருக்கிறார். இல்லையென்றால் உண்மைக்குப் புறம்பாக, அவர்கள் அப்படி எழுதியிருக்கவே மாட்டார்கள் என்று சுப்பிரமணியம் சொல்லாமல் சொல்லிவிட்டாரே!

தஞ்சை பெரிய கோயிலின் அறங்காவலராகப் பணியாற்றிய திரு. சோமசுந்தரம் பிள்ளை, B.A. B.L., அவர்கள் எழுதிய ‘தஞ்சை பெரியகோயில்’ (The Great temple at Tanjore) என்ற நூலை தஞ்சை அரண்மனை தேவஸ்தானமே வெளியிட்டிருக்கின்றதே! அந்த நூலில் மிகத் தெளிவாக இராசராசனைப் பற்றி கூறுகின்றாரே! கோயிலில் உள்ள சிற்பங்கள், படிமங்கள், ஓவியங்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டும், தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தால் அளிக்கப்பட்ட இராசராசனின் ஓவிய, சிற்பங்களின் படமும்வெளியிடப்பட்டிருக்கின்றதே, அதைப்பற்றி என்ன எண்ணுகிறீர்கள்? என்று யாரும் மாண்புமிகு சிசுவைக் கேட்கக் கூடாது. திரு, சிசுவை விட, அந்தக் கோயிலை நன்றாக அறிந்தவர், ஆராய்ந்து பார்த்தவர் யாரும் இருக்கவே முடியாது! கலைஞர் அவர்களின் விருப்பமறிந்த அரண்மனை தேவஸ்தானத்தார்தான் திரு, சோமசுந்தரம் பிள்ளை அவர்களிடம் அப்படி ஒரு நூல் எழுதி வெளியிட்டிருக்க வேண்டும். என்றே நாம் எண்ணுவோமாக!

எல்லாவற்றிற்கும் மேலாக, மத்திய அரசின் ஆணைக்கு ஏற்ப, செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற தொல் பொருள் ஆராய்ச்சிக் கழகத்தார் வெளியிட்ட ஆண்டறிக்கைகளும் (சுமார் 1930இல் இருந்து) புகைப்படங்களிலும், இராசராசனின் ஓவியமும், சிற்பமும், மீசை இல்லாத நிலையில் தெளிவாக (கண் பார்வை சற்று மங்கியவர்கள்கூட கண்டு கொள்ளும்படியாக) விளக்கிக் கொண்டிருக்கின்றனவே! அது எப்படி பொய்யாகிவிடும்? என்று நீங்கள் கேட்டாலும் கேட்கலாம்! தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தில் பணியாற்றுகின்ற எல்லாருமே திராவிட முன்னேற்றக் கழகத்தவர்தான் என்பது உங்களுக்கு எப்படித் தெரியப் போகிறது. ஆகையால்தான் அவர்கள் எல்லாம் அப்படி இல்லாததை இருப்பதாக் கூறி வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். தனது அரிய கண்டுபிடிப்பிற்கு முற்றிலும் மாறாகச் செய்திகளைத் தந்து கொண்டிருக்கின்றதொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தார்மீது மாண்புமிகு சிசு அவர்கள் தக்க நடவடிக்கைகள் எடுக்காமல், ஆண்டவன் அவர்களைக் காப்பாற்றுவாராக!

மாண்பு மிகு சிசு அவர்கள், தமிழகத்தில் அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில், அரசினரால் வெளியிடப்பட்டிருக்கின்ற தஞ்சை மாவட்ட அரசிதழ் அறிக்கையில் இராசராசனைப் பற்றிய குறிப்புகளை எல்லாம் அப்போதிருந்த தமிழக அரசே வெளியிட்டிருக்கின்றதே! அதைப் பற்றி ‘மாண்புமிகு’ என்ன சொல்லுவார் என்று நீங்கள் எண்ணிப் பார்க்கக் கூடாது. திரு. சுப்பிரமணியம் அவர்கள், அதிதீவிரமாக இராசராசனைப் பற்றிய ஆராய்ச்சியில் அப்படியே மூழ்கிக் கிடந்தபோதுதான், கலைஞர் அவர்கள் அந்த அறிக்கையை அரசின் பெயரில் வெளியிட்டிருக்க வேண்டும். அந்த அறிக்கை முற்றிலும் பிழையான கருத்துக்களை பரப்ப வெளியிட்டிருப்பதால், உடனடியாக அதை மறுத்து, மத்திய அரசின் அறிக்கை ஒன்றை மாண்புமிகு தாக்கல் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

‘தஞ்சை பெரியகோயிலைக் கட்டிய இராசராசனின் சிற்பங்களும், ஓவியமும், படிமமும் அக்கோயிலின் உள்ளே இன்றும் இருக்கும்போது, அவனுடைய முழுவடிவச் சிலையை கோயிலின் உள்ளே வைப்பதில் என்ன குடிமூழ்கி விடப் போகிறது என்று தஞ்சை மக்களைப் போலவே, தமிழகத்து மக்களும் எண்ணக்கூடும். சுமார் 1000-ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட அக்கோயிலில், இன்று, ஒரு சிலையை வைத்துவிட்டால், அதன் மூலம் பழம்பொருள் - நினைவுச் சின்னங்கள் பாழ்பட்டுவிடும் என்று மத்திய அரசு அஞ்சுவது உங்களுக்குத் தெரியாமல் இருப்பதில் வியப்பில்லைதான்.

“பழங்கால நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கவே, இக்காலத்தில் எதையும் கோயிலின் உள்ளே வைக்கக்கூடாது என்று சொல்லுகின்ற அதே மத்திய அரசு ராஜேந்திர பிரசாத் அவர்கள் ஜனாதிபதியாக இருந்தபோது, தஞ்சைப் பெரிய கோயிலுக்கு வந்தாரே; அப்போது அக்கோயிலில் நடைபாதையும், படிக்கட்டுகளையும் சிமெண்டு, செங்கல் கொண்டு கட்டினார்களே, அது அப்படியே இன்றும் பிரசாத்தின் வருகையின் நினைவுச் சின்னமாக இருக்கட்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இருக்கிறதே, அதுபோல ஏன் அக்கோயிலைக் கட்டிய மன்னர் மன்னன் இராசராசனின் திரு உருவச் சிலையை கோயிலின் உள்ளேயே வைக்கக்கூடாது?” என்று தஞ்சை மக்கள் கேட்கக் கூடாது! காரணம் மதிப்புமிக்க இராசேந்திர பிரசாத் எங்கே? இராசராசன் எங்கே! இருவரும் ஒன்றாக முடியுமா? மேலும் பிரசாத்திற்கும் பெரிய கோயிலுக்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்பு உண்டு என்பது உங்களுக்குத் தெரியாது! அதெல்லாம் திரு. சுப்பிரமணியத்திற்கும், மத்திய அரசுக்குமே தெரிந்த வரலாற்று ரகசியங்களாகும்!

இனிமேலாவது வரலாற்று ஆசிரியர்களும், தமிழக வரலாற்றைப்

(15-ஆம் பக்கம் பார்க்க)

உரைகல்

நூல்:

மனக் காற்றுடி

ஆசிரியர்:

தாமரைக்கண்ணன்

விலை: ரூ. 3/-.

கிடைக்குமிடம்:

அசோசியேசன் பப்ளிசிங் அவுசு,
94-95, புதுத் தெரு,
மண்ணடி, சென்னை-1.

★

கதை எழுதுவதும் ஒரு கலை; அரிய கலை. தாளும் எழுதுகோலும் இருந்தால் யார் வேண்டுமானுலும் 'கதாசிரியர்' ஆகலாம் என்பது சொல்வதற்கு வேண்டுமானுல் சுவையாக இருக்கலாம்; ஆனுல் உண்மை நிலை அதுவன்று. வாழ்க்கையின் நிகழ்ச்சிகளுக்குக் கதை வடிவம் கொடுப்பது என்பதே ஒரு தனித் திறமைதான். அத் திறனில் —கலையில் சிறந்து விளங்குகிருர் இந் நூலாசிரியர் தாமரைக்கண்ணன்.

பத்துச் சிறு கதைகளின் தொகுப்பே இந்நூல். இன்றுள்ள சமுதாயத்தின், மக்கள் மனநிலையின் உண்மையான படப்பிடிப்பாக — பிரதிபலிப்பாகத் திகழ்கிறது; நன்கு உணர்கின்ருேம்.

"நெஞ்சின் ஆழம்" உண்மையிலேயே நம் நெஞ்சைத் தொடுகிறது. அக்கதையில் வரும் மஞ்சுளா ஒரு தெய்வீகப் படைப்பு.

"மனிதன் மனம் ஒரு காற்றுடி; சந்தர்ப்பச் சூழ் நிலை என்னும் காற்று வீசும் பக்கமெல்லாம் பறக்கும் விசித்திரமான காற்றுடி." "மனக் காற்றுடி" என்னும் கதையில் வரும் தத்துவம் உலக நடைமுறையினை உணர்ந்து கூறப்பட்டதாகும்.

நல்லெண்ணமே இல்லாத சமீன்தார் நல்லெண்ணம் என்பவரைத் 'தலையெழுத்து' என்னும் கதையில் சந்திக்கிருேம்.

'தூக்கம்', 'துணை', 'நீங்கா ஓவியம்', 'இரண்டு இரவுகள்', ,ஆழி', 'புரளி', ஆகிய ஏனைய கதைகள் அனைத்தும் நம் நெஞ்சைவிட்டு நீங்கா ஓவியங்களாக மிளிர்கின்றன.

இக்காலச் சமுதாயமே வீண் 'புரளி'யில் புரண்டு கொண்டு தானே புன்னகை செய்கிறது? அதனுற்ருன்போலும் 'அழைப்பிதழோடு' தொடங்கிய ஆசிரியர், 'புரளி'யோடு நூலை முடித்துள்ளார். புரளியால் ஏற்படும் விபரீத விளைவுகளை அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகிருர். புரளிக்கு ஆளாகும் பரிதாபத்துக்குரியவன் யார் என்று நினைக்கிறீர்கள். அவன் பெயர்தான் 'அரசு'. அரசுவின் மேல் புரளியைக் கிளப்பிவிட்டவனே இறுதியில், "அரசு...உத்தமருங்க! நான்தான் வீண் புரளி செய்து அவர்மீது அபாண்டமான பழிகளைச் சுமத்தினேன்" என்று தன் தவறுக்காக கலங்குகின்ருன்.

"கல் நெஞ்சக்காரர்களையும்கூட கலங்கவைக்கும் திறன் வீண் புரளிக்கு உண்டு" என்பது ஆசிரியர் கருத்து. அத்தகைய வீண்புரளியைக் கிளப்பிவிட்டவன், அதற்கே பலியாகிருன்.

நெடுங்கதை எழுதுவதைக் காட்டிலும் சிறுகதை எழுதுவது கடினம் என்பர். "எண்ணத்தின் ஒரு சிறு துளியையோ ஒரு சிறு நிகழ்ச்சியின் நடுமையத்தையோ மட்டும் அடிப்படையாகக்கொண்டு அமைவதே, சிறுகதையின் கருவாகும்" என்கிருர் 'கதைக்கு ஒரு கதை' எழுதும் நூலாசிரியர். அஃது உண்மையே! அத்தகைய 'கரு' அமைந்த சிறுகதைகள் வடிப்பதில் வல்லவர் என்பதனை புலவர் தாமரைக் கண்ணன் இச் சிறுகதைத் தொகுதிமூலம் உறுதி செய்கிருர்.

—மணிவேந்தன்

★

(14-ஆம் பக்கத் தொடர்ச்சி)

படிக்கின்றவர்களும், இராசராசனின் உருவத்தைப்பற்றி எண்ண வேண்டாம்! பேச வேண்டாம்! என்று மாண்புமிகு சிசுவின் சார்பாகக் கேட்டுக்கொள்வேன்! இனி மேல் எல்லாருமே ஆராய்ச்சி அறிஞர் சுப்பிரமணியத்தின் கண்டு பிடிப்புகளையே நம்பித்தொலைவோமாக! வாழ்க அறிஞர் சுப்பிரமணியம்! *

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

"நான் கொதித்தெழுந்தேனு?" என்று நீங்கள் கேட்கலாம்; "எங்கள் கட்சி கொதித்தெழுந்ததா?" என்று கேட்பீர்கள்!! நீங்களும், உங்கள் கட்சியும் குதிரையேற நினைத்த மொழிக்கும் கொத்தடிமைகளாயிற்றே!! "இனமா? ஒன்று; நாடா? ஒன்று; மொழியா? ஒன்று" என்று பேசி, 'எதை யெதையோ' எதிர்பார்த்தவர்களாயிற்றே; நீங்கள் எப்படி இந்தியை எதிர்க்க முடியும்? உங்களைச் சேர்ந்தவர்களால் மொழித் தியாகிகளாக எப்படி ஆகமுடியும்?

தி. மு. கழகத்தால் உங்களைப் போல் இருக்க முடியவில்லை. ஏன்? அது திராவிடர் இயக்கம்!! உங்கள் இயக்கம் தேசீய இயக்கம்; தேசியம் என்ருல் இந்தியே என்று மயங்கிக் கிடக்கும் உங்களுக்கு மானத்தைப் பற்றியோ, எப்படி நினைத்துப்பார்க்க முடியும். தமிழர் மனம் பற்றியோ எனவே தான், தி. மு. கழகம் இந்தியை எதிர்த்தது; தி. மு. கழகத்தினர் தியாகிகள் ஆகிட முடிந்தது; இந்தித் திணிப்பை உலகம் உணர்ந்திடவும், இந்தி எதிர்ப்புணர்வை உலகம் மதித்திடவும் தன்னையே எரிக்குணவாகக் கொடுத்த தியாகத்தை தி. மு. கழகக் கண்மணிகளால் செய்ய முடிந்தது. உலகத்திலேயே, தாய்மொழிக்காகத் தன்னை ஈந்த வரலாற்றைத் தி. மு. கழகத்தினரால் படைக்க முடிந்தது.

பாறை போல் நின்றவரே! பக்தவத்சலனுரே! இப்போது புரிந்ததா? உமக்கு எப்போதும் புரிந்த சில உண்மைகளை எதுக்கென்றே தெரியாமல் எதிர்ப்பீர்கள்; போகட்டும்!;

தன்னையே கொடுப்பதுதான் தியாகம்; அந்த தியாகத்தை எந்த நல்ல பணிகளுக்குச் செய்தாலும் அவர்கள் தியாகிகளே, இதில் கட்சியும் இல்லை; எதுவும் இல்லை!!

வெந்ததைத் தின்று, வாயில் வந்ததைப் பேசி வாழ்ந்தது போதும்: தெளிவடைய முயலுங்கள்; திருந்தி வர விரும்புங்கள்!!

தமிழகத்தின் வரலாற்றில் களங்கத்தை ஏற்படுத்தியது போதும்!! செய்த பாவத்திற்குக் கழுவாய்த் தேடா விட்டாலும், புதிய பாவப் புற்றுக்குள் குடிபோகாமலாவது இருங்கள்!!'

உங்கள் வரலாற்றில், அரசியல் வரலாற்றைத்தான் குறிப்பிடுகிறேன், கடைசி வரியாவது ஒழுங்காக எழுதப் படட்டும்;!! *

தொழிலாளி தேர்ந்தெடுப்பது

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுதான்.

தச்சுத்தொழிலாளியான வீரராகவன் எப்பொழுதும்
வாங்குவது தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகளே!



இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

ஒரு லட்சம் ரூபாய் பரிசு பெறுங்கள்.

மொத்தப் பரிசுத் தொகை *

ரூ. **10,50,000**

மொத்த வரிசைகள்: மூன்று

மொத்த பரிசுகள் 3198

முதல் பரிசு:
ஒரு லட்சம் ரூபாய்
(ஒவ்வொரு வரிசைக்கும்)

குலுக்கல் நாள்:
29-4-1972

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை: ரூ. 1/-

தமிழ்நாடு பரிசுச்சீட்டு இதுவரை 276
லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது!